# சிறுத்தொண்ட நாயனார் யட்சகானம்



பதிப்பாசிரியர் :

**முனைவர் சு. செளந்தரபாண்டியன்**

எம். ஏ., எம். ஏ., பி. எட், டிப். வ. மொ., பிஎச்.டி

பொதுப்பதிப்பாசிரியர் :

**நடன. காசிநாதன்** எம்.ஏ.,

அ.கீ.சு. நூலக வெளியீட்டு எண். 407
தமிழ் நூல் வெளியீட்டு எண். 111

# சிறுத்தொண்ட நாயனார் யட்சகானம்

பதிப்பாசிரியர்

**முனைவர் சு. செளந்தரபாண்டியன்**
எம்.ஏ., எம்.ஏ,, பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.,
காப்பாட்சியர்,
அ.கீ.சு. நூலகம்
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

பொதுப்பதிப்பாசிரியர்

**நடன. காசிநாதன்,** எம்.ஏ.,
இயக்குநர்,
தொ.பொ.ஆ. துறை,
சென்னை - 600 113.

அ.கீ.சு.நூ.
1997

விலை ரூ. 39

G.O.M.L. Publication No. 407
Tamil Publication No. 111

# SIRUTHONDA NAYANAR YATCHA GANAM

*Editor*

**Dr. S. SOUNDARAPANDIAN**
M.A., M.A., B.Ed., Dip. Skt., Ph.D.,
**Curator,**
G.O.M.L.,
Chennai - 600 005.

*General Editor*

**Natana. Kasinathan,** M.A.,
**Director,**
*Dept. of Archaeology,*
Chennai - 600 113.

**G.O.M.L.**
**1997**

**Price Rs. 39**

## பதிப்புரை

சிறுத்தொண்டர் யட்சகானம் எனும் இந்த இசைநாடகத் தமிழ் இலக்கியம் இதுவரை அச்சில் வெளிவராதது.

சென்னை, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலிருக்கும் ஓலைச்சுவடி எண். 504 இலிருந்து தற்போது இந்நூல் இங்கே பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சாரங்கதர யட்சகானம் எழுதியவர் வெள்ளிக் கந்தய்யர்; இவரின் மகனான ஞானப்பிரகாசன் சிறுத் தொண்டர் யட்சகானத்தின் ஆசிரியர் ஆவார். வெள்ளிக் கந்தய்யர் சோழநாட்டு மாதை எனும் ஊரில் பிறந்தார்; வீரசைவர்.

நூலின் காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகலாம்.

திருத்தொண்டர் புராணத்தை அடியொற்றி, சிறுத்தொண்ட நாயனார் வரலாற்றை வருமாறு வரையலாம்

சிறுத்தொண்ட நாயனார், திருச்செங்காட்டங்குடி (நன்னிலம் தாலுகா, தஞ்சை மாவட்டம்) எனும் ஊரில் வேதியர் குலத்தில் பிறந்தவர். இயற்பெயர் பரஞ்சோதி. இவர் வேத அத்தியயனமும் வில்வித்தை முதலியனவும் கற்றவர்.

முதலாம் நரசிம்மவர்ம பல்லவனிடத்தில் தளபதியாகப் பணி செய்தார்.

சிறுத்தொண்டர், வெண்காட்டு நங்கை எனும் தன் மனைவியோடு வாழுகையில், ஒரு நாள் பைரவக் கோலத்தில் சிவன் இவர் வீட்டிற்கு உணவுக்காக வந்தார். அடியவர் உருவில் வந்த சிவனை உண்ண அழைத்தார் சிறுத்தொண்டர்.

“நாம் ஆறுமாதத்திற்கு ஒருமுறைதான் உணவு அருந்துவது, அந்த உணவு நரமாமிசத்துடன் கூடியது. அந்த மாமிசமானது, ஒரே புத்திரனாய், அங்கக் குறைவு இலானாய், ஐந்து வயது உள்ளவனாய் இருப்பவனை அறுத்து, ஒரு உறுப்பும் குறையாது சமைத்ததாய் இருக்கவேண்டும்” என்றார் வந்த அடியார்.

அவ்வாறு உணவு படைக்க உடன் பட்டார் சிறுத்தொண்டர்.

மனைவியிடம் தெரிவித்தார்; இறுதியாக, தன் மகனாகிய சீராளதேவன் என்பவனை அறுத்துச் சமைத்து, அச் சிவனடியாருக்கு உணவு தந்தார்.

“எல்லா உறுப்புகளும் கிடைக்கப் பட்டனவா ?” – சிவனடியார் கேட்டார். “தலை தவிர, மற்றவை சமைக்கப்பட்டன” சிறுத்தொண்டர் பதில் தந்தார். “தலையையும் சமைக்கவேண்டும்” – அச்சிவனடியார் கூறினார். இவ்வாறு இவர் கேட்பார் என்று முன்பே

தலையையும் சமைத்துவைத்த சந்தனத்தார் எனும் தோழியார், அதனையும் அச் சிவனடியாருக்குப் படைத்தார். "என்னோடு உண்ண இன்னொரு சிவனடியாரும் வேண்டும்" – இச் சிவனடியார் கேட்டார். இறுதியில், 'நீரே அமரும்" என்றார் சிறுத்தொண்டரிடம். சிறுத்தொண்டரும் உடன்பட்டு அமர்ந்து, புசிக்க முனைந்தார். உடனே தடுத்த அச்சிவனடியார், "உமக்குப் புத்திரன் இருந்தால் அவனையும் அழையுங்கள், அமர்ந்து உணவுண்ண" என்றார். அதற்கும் உடன்பட்ட சிறுத்தொண்டர், தெருவிற் சென்று, "சீராள!" என்று கூறினார். உடனே, பள்ளியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த தன் மகன் எதிரே ஓடி வந்தான்! சிறுத்தொண்டன், அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு வீட்டினுள் நுழைய, அச்சிவனடியாரும் சமைத்த உணவுகளும் மறைந்துவிட்டன!

ஆங்கு சிவன் ரிடப வாகனத்தில் காட்சி தர, சிறுத்தொண்டர் அவர் திருவடியிற் சேர்ந்தார் என்பது புராண வரலாறு.

இக்கதையுடன், கழுக்குன்றன், அவன் மனைவி கழுக்காணி, அவர்கள் புதல்வன் கழுவாமணி ஆகியோர் கதை ஒன்றும் இந்த யட்சகான நூலில் மிகச் சுவையாகக் கூறப்பட்டுள்ளது. இந்தக் குழுவாமணி கதை, பெரியபுராணத்தில் உள்ள சிறுத்தொண்ட நாயனார் வரலாற்றில் (மொத்தப் பாக்கள் 88) கூறப்படாததாகும்.

கழுக்காணி எனும் வெள்ளாளப் பெண், கழுவாமணி எனும் தன்மகனை, சிவபக்தி நிமித்தமாக, தலையில் அடித்துக் கொன்றுவிடுகிறாள். இக்கதையை நேரடியாக நடக்கும்போது காட்டுகிறார் சிவன்; சிறுத்தொண்ட நாயனாருக்குக் காட்டி, "பார்த்தாயா ? நீ என்னவோ, தெரியாத்தனமாக உன் பிள்ளையைக் கொன்று கறி சமைத்ததாகக் கயிலாயத்தில் வாயில் காப்போனிடம் கூறினாயே, இதற்கு என்ன சொல்கிறாய் ? உனக்கு இன்னும் அறிவு திருந்த வேண்டியுள்ளது" என்று சிவன் சிறுத்தொண்டனிடம் கூறுவதாக இந்த யட்சகானத்தின் பின்பகுதி உள்ளது.

இந்த யட்சகானத்தில், திபதை, சிந்து, வெண்பா, கலித்துறை, ஆகிய யாப்பு வகைகள் வந்தன. வசனம் எனும் பகுதி இடையிடையே வருவது மிகுந்த சுவையளிப்பது; நாடகப் பாங்கிற்கு ஏற்றது இந்த வசனம். ஏகதாளம், திரிபுடைதாளம், சம்பை தாளம் முதலிய தாளங்களில் அமைந்த இசைப்பாக்கள் இந்த யட்சகான நூலை அழகு படுத்துகின்றன.

பிள்ளைக்கறி சமைத்த சிறுத் தொண்ட நாயனார் வரலாறு திகைப்பளிக்கும் வரலாறு ஆகும்! அத்தகைய சுவைமிகு வரலாற்றை வெகு சுவையாகவும், எளிமையாகவும், இசையோடு கலந்து தருகிறது இந்த யட்சகான நூல்.

யட்சகானம் எனும் தெலுங்கு மொழி இலக்கிய வகைக்கு மூலம் தமிழ்த் தெருக்கூத்தே. எனவே, யட்சகானங்கள் தமிழ் மொழி இலக்கியவகைக்கு ஏற்புடையதே.

இந்த யட்சகானத்தில் காணப்படும் நாடகப் பாங்கு நன்கு அனுபவித்தற்குரியது. ஒவ்வொரு செயலும் நாடகத்தின்

ஒவ்வொரு காட்சியாகப் பின்னப்பட்டுள்ள சிறப்பு ஆயத்தக்கது. தமிழில் மேடைக்கலை அந்தக் காலத்திலேயே சிறந்திருந்தது என்பதற்கு இந்த யட்சகான நூலே சான்று.

மேடை நாடகமாக நடித்துக்காட்டுவதற்கு இந்த யட்சகானம் பெரிதும் பயனாக இருக்கும்.

இவ்வகைகளால், தமிழுக்கு ஒரு புதிய அணியாக சிறுத் தொண்ட நாயனார் யட்ச கானம் திகழ்கிறது எனலாம்.

அன்புடன்

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (ஆங்.),
பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.,

காப்பாட்சியர்

அ.கீ.சு. நூலகம்
சென்னை – 600 005.

# UPPER LIMIT OF THE FAITH........

We have got a wonderful Yakshagana Literature from the pen of Gnanaprakasa, son of Vellikkandappaiyar.

Flourished in 19th Century A.D., this musical work, furnishes us Tamil Music Songs suitable to stages of that period.

Tamil land is the birthplace of drama. Acting of characters was an innate quality of Tamils.

Cultivation, hunting, fishing, weaving, carpentary, blacksmithy are some of the basic fields necessary for the origin of drama. Undoubtedly Tamil soil was full of these activities from time immemorial.

In Tolkappiyam we have a separate chapter called 'Meyppattiyal' which is nothing but a basic quality for acting.

The navarasa concept spoken in Sanskrit was born only from Tamils' 'Meyppadu'.

If we observe keenly people working in fields cutting trees, making iron or wood pieces, we can find some sort of drama in their activities, Song, dialogue, comedy, music etc which are wanted for a planned drama or Kuththu can be enjoyed by us.

Actually, very fine humour and good sattire of the Tamils have not seen the stage so far.

Playwrights have succeeded only in depiciting certain qualities of Tamils' in regard to their skills of rendering rasas or bhavas.

Playing on musical instruments was assigned to certain communities like Banar, etc even in Sangam Age in Tamil Nadu. In otherwords, particular community was so fascinated to music that they could not think otherthing even for calling. Isai Vellalar was another such community in TamilNadu.

'Deva dhundubi' is nothing but Tamils' 'Urumi Melam'. The word 'deva' denotes its elevated sound. Incidentally, 'devas' mentioned in puranas were noneother than Tamils.

Nurturing of music on Tamil land by Saivaites and Vaishnavites can not be ignored at this juncture.

Thevaram is really a mine of Tamil ragas and thalas.

The ragas of Thirunavakkarasar (7th C. A.D.), Thiruganana Sambandar (7th C. A.D.) and Sundarar (9th C. A.D.) cannot be wiped out from the minds of Tamils.

Ramanujar (11th C. A.D.) made it a practice of singing Divaprabhandas in Vaishnava temples. Till date this has been followed by Vaishnavaites.

Coming to our present text, was the action of Siruththondar an imagination? or, Was it true?

Yes! it was true!

Killing of his own son by Siruththondar may have happened actually.

Manu Neethic Chozhan sacrificed his own son Veedividangan. It was also a true fact.

These all denote their extreme faith in their concerned philosophies.

So, this is the glorious backdrop of this Yakshagana.

I am indebted to Thiru. Natana Kasinathan, Director, Department of Archaeology, Chennai - 600 113. in all sorts of his help and advice in this publication.

*Yours,*

**Dr. S. SOUNDARAPANDIAN**
M.A., M.A., B.Ed., Dip. Skt., Ph.D.,
**Curator,**
G.O.M.L.,
Chennai - 600 005.

# ஓலைச்சுவடிகளும்

## அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகமும்

**- முனைவர் சு. சௌந்தரபாண்டியன்,**
காப்பாட்சியர்

மிகப்பழங்காலத்தில் மனிதன் கற்பாறைகள் மீது தன் எண்ணங்களைப் பொறித்து மகிழ்ந்தான். விலங்குகள், வேட்டையாடுவது போன்ற பழங்காலக் கற்பாறை ஓவியங்கள் நமக்கு இதைப் புலப்படுத்துகின்றன.

அகழ்வாய்வுகளில், சுட்ட மண்பாண்டங்களின் மீது பல்வகை எழுத்துக்கள் இருப்பதை நாம் கண்டுள்ளோம்.

கி.மு. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் தொல்காப்பியம், ஓலையில் தான் எழுதப் பட்டிருக்க வேண்டும்.

கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்க இலக்கியமான அகநானூற்றுப் பாடலில், ஓலைச்சுவடி பற்றிய நேரடிக் குறிப்பு கிடைக்கிறது.

கி.பி. 2ஆம் நூற்றாண்டு இலக்கியமான சிலப்பதிக்காரத்தில், தாழம்பூ மடலில் எழுத்துகள் எழுதப்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது;

முதிர்பூந் தாழை முடங்கல்வெண் தோட்டு
..... ..... .....
..... ..... அயலது
பித்திகைக் கொழுமுகை ஆணி கைக் கொண்டு"

(வேனிற்காதை 49, 55)

எனப் பாடப்பட்டுள்ளது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் தீயில் இட்ட ஏடு தீப்பிடிக்காமல் இருந்த அதிசயத்தைப் பாண்டியன் கண்டான் எனவும் நாம் படிக்கின்றோம்.

இவ்வாறு ஓலைச் சுவடிகளுக்குத் தமிழகத்தில் நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது.

நமது அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் ஆசியாவிலேயே மிகப் பெரிய சுவடி நூலகமாகும்.

தமிழ்ச் சுவடிகளைப் பொறுத்தவரை உலகிலேயே இந்த நூலகத்தில் தான் மிக அதிகமான சுவடிகள் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் நாட்டில், தஞ்சை சரசுவதி மகால் நூலகம், திருவான்மியூர் உ.வே.சா. நூலகம், போன்ற சில சுவடி நூலகங்கள் இருந்தாலும் அவை எல்லாவற்றையும் விட அதிக எண்ணிக்கையில் சுவடிகளைப் பெற்றிருப்பது அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகமே.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், தோன்றுவதற்குக் காரணமாக இருந்தோர் மூவர். காலின்

மெக்கன்சி, டாக்டர் லெய்டன், சி.பி. பிரௌன் ஆகியோரே அந்த மூவர். இம்மூவர் தொகுத்த சுவடிகளைக் கொண்டு 1869இல் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் தொடங்கப்பட்டது.

தற்போது இந்த நூலகத்தில் 71,180 சுவடிகள் உள்ளன. இவற்றில் தமிழ் மட்டும் 16,398 ஆகும். இந்த 16,398 சுவடிகளிலிருந்து நூற்கள் பதிப்பிக்கப்பட்டு வந்தாலும், இன்னும் ஏறத்தாழ 500 சுவடிகள் பதிப்பிக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்துச் சுவடிகள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வடமொழி, உருது, பாரசீகம், அரபு, ஒரியா, மராத்தி, சிங்களம் முதலிய மொழிகளில் அமைந்துள்ளன. வடமொழிச் சுவடிகள், கிரந்தம், நந்திநாகரி முதலிய எழுத்துகளின் அமைந்துள்ளன.

வடமொழியைப் பொறுத்தவரை, இந்தியாவிலேயே மிகச் சிறந்த வடமொழி ஆராய்ச்சி நிறுவனமாகக்

கருதப்படுவது நமது அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில், பனை ஓலைச் சுவடிகள் தவிர, பிர்ச்பார்க் எனும் மரப்பட்டையில் எழுதப்பட்ட சுவடிகளும் உள்ளன.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்து ஓலைச் சுவடிகளில், மிகப்பழமையானது கி.பி. 1605ஆம் ஆண்டைச் சேர்ந்த கன்னடச் சுவடியாகும். இதினினும் பழைமை வாய்ந்த ஓலைச்சுவடி இந்நூலகத்தில் இருக்கக்கூடும் என்றாலும் அவற்றைக் குறிப்பிட்டுக் கூற நமக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ் அச்சு நூற்களில் மிகப்பழைமையானது கி.பி. 1828இல் அச்சிடப்பட்ட 'இலக்கண வினாவிடை' என்ற நூலாகும்.

ஓலைச் சுவடியிலிருந்து முதன் முதலாக நூல்

பதிப்பிக்கப்பட்ட ஆண்டு 1811 ஆகும். 1811இல் திருக்குறள் நூல் முதல் முதலாக ஓலையிலிருந்து பதிப்பிக்கப்பட்டது. இதற்குப் பின்னரே, ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே.சா. முதலியோர் பதிப்புப் பணிகளில் ஈடுபட்டனர். அந்த வரிசையில்தான், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் புலவர்களும் இப்போது நூற்களைப் பதிப்பித்து வருகின்றனர்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் முதல் தமிழ் நூல் 1912இல் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து இன்றுவரை மொத்தம் 108 தமிழ் நூற்கள் அச்சிடப்பட்டுள்ளன. வடமொழி, தெலுங்கு, இசுலாமிய மொழிகள், மராத்தி வெளியீடுகளையும் சேர்த்து மொத்தம் இதுவரை நூலகம் 403 வெளியீடுகளை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் ஒரு பல்கலைக்கழக நிலைய அடைந்துள்ளது இந்நூலகம் எனலாம்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் பருவ இதழ் குறிப்பிடத்தக்கது. இது தமிழ், தெலுங்கு, வடமொழி, உருது ஆகிய நான்கு மொழிகளில் வெளிவருவது. இதுவரை

மொத்தம் 23 தொகுதிகள் வெளிவந்துள்ளன; 24 ஆவது தொகுதி அச்சில் உள்ளது. இந்தப் பருவ இதழ் தொடர்ந்து வெளிவருவதற்கு ஏதுவான அரசாணை 1995–96இல் பிறப்பிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் அச்சகத்தில் ஆண்டுதோறும் தமிழ் நூற்கள் அச்சிடவும் சென்ற நிதியாண்டில் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1980இலிருந்து தொல் பொருள் ஆய்வுத் துறையின் கீழ் இயங்கிவரும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், அண்மைக் காலத்தில் வெகுவேகமான முன்னேற்றம் கண்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் இந்த நூலகம் 33 நூற்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் தற்போது தமிழ்ப் புலவர் ஒருவர், தெலுங்குப் புலவர் ஒருவர், வடமொழிப் புலவர் மூவர், உருதுப் புலவர் ஒருவர், ஆக அறுவர்

பணியாற்றுகின்றனர். இவர்கள் நூலகக் காப்பாட்சியரின் நேரடிக் கண்காணிப்பில் பணியாற்றி வருகின்றனர்.

இப்புலவர்கள் நூற்களைப் பதிப்பிப்பதோடல்லாது, ஆராய்ச்சிக்காக வரும் கல்வியாளர்களுக்கும் பல்வேறு வகைகளில் உதவிகளைச் செய்து வருகிறார்கள். இந்த நிலையின் காரணமாகத்தான், பல்வேறு மாணவர்கள் *அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடிகள் மீது* முனைவர் பட்டங்களை இன்று பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

சுவடிகள் தவிர, பழைய அச்சு நூற்களும் 25,000க்கும் மேற்பட்டு இந்த நூலகத்தில் இருக்கின்றன. பழைய நூற்களைப் பாதுகாத்துவரும் மிகச் சில நூலகங்களில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகமும் ஒன்றாகும்.

இப்படிப்பட்ட இந்த நூலகத்தை மேம்படுத்தும் திட்டங்கள் பல அரசிடம் உள்ளன. இந்த நிதியாண்டில், நூலகத்திற்கென உலர்பட நகல் எடுக்கும் கருவி ஒன்றும்,

சுவடிகளைப் பாதுகாக்கும் அலமாரிகள் சிலவும் வாங்கப்பட்டுள்ளன.

நூலக இருப்பறை குளிர்சாதனம் செய்யப்பட்டுள்ளது.

வெகு விரைவில் கணிப்பொறி, நுண்படம் போன்ற பிற சாதனங்களும் கொண்டுவரப்படும்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் வாயிலாகத்தான் 'தென்னிந்திய கோயிற் சாசனங்கள்' என்ற நூல் மூன்று தொகுதிகளில் வெளிவந்தது; அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் சுவடி விவர அட்டவணைகள் தாம், இந்தியா முழுமைக்கும் இப்போது ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது! அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் இப்படிப்பட்ட பெருமைகளையும், வலிமைகளையும் தமிழக அரசு தொடர்ந்து பாதுகாக்க உறுதி பூண்டுள்ளது.

# மறைந்து போகும் குழூஉக்குறிச் சொற்கள்

**டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன்,**
எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.,
காப்பாட்சியர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னை - 600 005.

குழூஉக்குறிச் சொற்கள் (Cants) பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பல்வேறு குழுக்களிடையே இருந்தவை. குறிப்பிட்ட ஒரு குழுவுக்கு மட்டும் தெரிந்துள்ள சொற்களே குழூஉக்குறிகளாம்.

ஒரு கருத்தை மற்றவர்களுக்குத் தெரியாமல் தன் குழுவினருக்குத் தெரிவிப்பதற்காக ஏற்பட்டவை குழூஉக்குறிச் சொற்கள்.

'பரிபாஷை' வேறு, குழூஉக்குறி வேறு. பரிபாஷைச் சொற்கள் என்றே தனி நிகண்டுகள் ஓலைச் சுவடிகளில் உள்ளன. ஆனால் எவ்வித நூல் வடிவும் பெறாதவையே குழூஉச் சொற்கள்.

விடுகதை அல்லது அழிப்பான் கதைச் சொற்கள் வேறு, குழுஉக்குறிகள் வேறு. விடுகதைச் சொற்களை ஒரு குழுவுக்கு என்று இலாது எல்லோருக்குமாக ஏற்பட்டவை. எனவே, குழுஉக்குறியினின்று அவை வேறுபடுகின்றன.

பழந்தமிழ்க்கூத்துக் கலைஞர்களிடையே அழகான குழுஉக்குறிகள் இருந்தன. இப்போது வாழும் தமிழ்க்கூத்துக் கலைஞர்களிடம் அவற்றில் சில எஞ்சியுள்ளன.

எடுத்துக்காட்டாக, 'ஏல' என்ற சொல் நாடகத்தைக் குறிக்கும்; 'ஏலக்கால்' என்றால் நாடகக்காரர் என்பது பொருள். 'இன்றைக்கு மற்ற ஏலக்கால் எல்லாம் வரவில்லையா ?' என்று அவர்களுக்குள் பேசிக்கொள்வார்கள்.

'சாரி' என்றால் பெண்வேடம் என்பது பொருள். "இன்றைக்கு யாரு சாரி ?" என்று கேட்டுக் கொள்வார்கள்.

'அவன் வரவில்லையா' என்று கேட்கமாட்டார்கள்;

‘அவன் கசமா ?’ என்று கேட்பார்கள்.

நல்ல சாப்பாடு என்று கூற, “நெட்டமான மாயி” என்பார்கள். ‘மாயிமசக்கிட்டியாஈ’ என்றால், ‘சாப்பாடு சாப்பாட்டு விட்டாயா ?’ என்பது பொருள்.

‘ஒத்து என்ன ?’ என்றால், ‘மணி என்ன ?’ என்பது பொருள்.

‘தண்ணீர் கொண்டுவா’ என்பதற்கு ‘பாஞ்சால கொண்டுவா’ என்பார்கள்.

‘இரண்டு பாட்டைக்குறை’ என்று சொல்வதற்குப் பதில், ‘இரண்டு பாட்டைக் கொல்லம்பண்ணு’ என்று குறிப்பர்.

‘சிக்கல் கிடைத்ததா ?’ என்றால், ‘துட்டு கிடைத்ததா ?’ என்பது பொருள். ‘சாங்கிக்கினியா ?’ என்றால், ‘வாங்கிட்டியா ?’ என்று பொருளாகும்.

இறந்துபோன நாடகக்காரனைச் சுட்டுவதற்கு, ‘கர்சிப்போன படிகான்’ என்பர்.

பணத்தை அதிகமா வாங்கு என்று கூற, ‘பணத்தை நெட்டமா வாங்கு’ என்பர்.

‘நேரம் கடந்துவிட்டது’ என்று பேச, ‘நேரம் கசமாயிருச்சி’ என்று கூறுவர்.

எண்ணிக்கைகளுக்கும் குழூஉச்சொற்கள் வைத்திருந்தார்கள் தமிழ்க்கூத்தர்கள்; சில இன்னும் பேசப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| ஏகம் | – | 1 |
| இரண்யா | – | 2 |
| முகாரம் | – | 3 |
| தசம் | – | 10 |
| அத்ர | – | 1/2 |

தமிழ்க்கூத்துக் கலைஞர்களிடையே காணப்பட்ட மேற்கண்ட குழுஉச்சொற்களைப் போலவே, தமிழ்ப் பொற்கொல்லர்களிடையேயும் பல குழுஉக்குறிச் சொற்கள் இருந்தன; இன்றும் இவற்றைப் பெரியார்கள் சிலர் நினைவில் வைத்துள்ளனர்.

'பொற்கொல்லர், என்று சொல்லுக்கு ஈடாக, 'மின்னி சிம்லான்' என்ற தொடரைப் பயன்படுத்தியுள்ளனர்.

'நீ பளுக்கிட்டியா ?' என்றால், 'சாப்பிட்டு விட்டாயா ?' என்பது பொருள்.

'துணி' என்பதைக் குறிக்கப் 'பொத்தியான்' என்கின்றனர்.

'நன்றாக' என்று பேச, 'முடுவா' என்பர்.

'ஒருவர் வருகிறார்' என்று கூற, 'பொடியன் வருகிறான்' என்கின்றனர்.

சாதிப் பெயர்களைக் குறிக்கவும் பொற்கொல்லர்கள் குழூஉச் சொற்கள் வைத்திருந்தனர். இசுலாமியரைக் குறிக்கச் 'சோணயன்' என்றனர். தோல் தைக்கும் தொழில் புரிவோரைச் சுட்ட, 'வார்ப்பொடியன்' என்ற சொல்லைக் கையாண்டனர். 'மட்டை' என்றால் கோமுட்டி வகுப்பைக் குறிக்கும். 'தப்புப் பொடியன்' என்பது, பறையறிவிக்கும் வகுப்பாரைக் குறித்தது.

மதுரையில் உள்ள பொல்வாணிகரிடையே பல குழூஉக்குறிச்சொற்கள் இருந்தன. இன்றும் சில சொற்கள் இவ்வகுப்பார் பயன்படுத்தி வருகின்றனர். புல்லு, கொளச்ச, துவாண்டை, லாவாண்டை முதலிய சொற்களைக் கொண்டு 50, 100, 1000 என்ற எண்ணிக்கைகளைத் தங்களுக்குள் பேசிக்கொள்கின்றனர்.

இன்னும், பல்வேறு தமிழ்க்குழுக்களிடையே குழூஉக்குறித் தமிழ்ச் சொற்கள் இருந்தன.

மேலே கண்ட குழூஉச்சொற்கள் இப்போது மறைந்து கொண்டு இருப்பவை; நாளடைவில் இவை மறைந்து போமாயின், தமிழுக்கே இழப்பு.

தமிழ்க் குழூஉச் சொற்கள் தமிழர் நாகரிகத்திற்குச் சான்று; பிறர் மனம் நோகாதவாறு சொற்களைப் பேச வேண்டும் என்ற தமிழர் நாகரிகம் போற்றத்தக்கது. குழூஉச் சொற்களைப் பயன்படுத்தியது தமிழரின் நிர்வாகத்திறனுக்குச் சான்றாகவும் இருக்கிறது. குழூஉச்சொற்கள் அந்தந்தக் குழுவின் செயல்பாடுகள் நேர்த்தியாக நடைபெறப் பெரிதும் உதவின.

இதுவரை தோன்றிய அகராதிகள் இத்தகு குழூஉக் குறிச்சொற்களைக் தொகுத்தளிக்கும் முயற்சியில் ஈடுபடவே இல்லை. தமிழ்க் குழூஉக் குறிச் சொற்களைத் தொகுத்து அவற்றை அகராதிகளில் சேர்த்துப் பாதுகாக்க வேண்டியது நம்மனோர் கடமையாகும்.

# பூசை - தமிழர் கண்ட தத்துவம்

**- முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
காப்பாட்சியர்

'பூஜை' என்ற வடசொல்லைத்தான் 'பூசை' என்று தமிழில் கூறிவருகிறார்கள் என்போருளர்.

அடிப்பிழை இது.

உண்மையில், பூசை என்ற தூய தமிழே, பூஜை என்று வடமொழியா ளர்களால் கூறப்பட்டது.

பூ + செய் = பூசெய் என்று பிரித்து, பூக்களால் அருச்சனை, செய்வதால், 'பூசெய்' என்று ஆகிப் பின், 'பூசை' ஆனது என்ற கருத்தும் தவறே.

பூவுக்கும், தமிழர் கண்ட 'பூசை'க்கும் தொடர்பில்லை.

பூ + ச் + ஐ = பூசை என்று பிரிக்கவேண்டும்.

பூ – பகுதி; ச் – எழுத்துப் பேறு; ஐ – தொழிற் பெயர் விகுதி.

பூ – பரப்புதல்; படைத்தல்

(கடவுளுக்குப்) படைத்தளித்தலே பூசை என்பதன் நேரான பொருளாம்.

கடவுளுக்கு உயிர்களைப் பலியிட்டுப் படைத்தனர் முன்னோர். அதனால்தான் இன்னும் கோயில்களில் பலிபீடங்கள் உள்ளன. அந்தக்காலத்தில், உயிர்ப்பலிப் படையலையே பூசை என்று குறிப்பிட்டனர்.

அஃதாவது, ஆட்டுக்கடா, கோழி போன்ற உயிர்களை வெட்டிக் கடவுளுக்குப் படைத்ததை அந்நாளில் 'பூசை போடுதல்' என்று வழங்கினர்; இன்றும் இவ்வழக்காறு உண்டு. மலருக்கு (பூவுக்கும்) இச்செயலுக்கும் யாதொரு தொடர்புமில்லை என்பது இங்கே மேலும் தெளிவாகும்.

'மண் பூசுதல்' என்பது, மண்ணைப் பரவ விடுதலே; ஒருமித்து இல்லாமல், வெவ்வேறாக இருப்பதே பூசல் (சண்டை); இங்கெல்லாம், படையல், பரவல், பிரிதல் என்ற பொருண்மைகள் 'பூ' எனும் வேருக்கு இருப்பதைக் காணலாம்.

'அதிதி பூஜை' என்று அதிதிகளுக்குச் சோறு படைப்பதையே குறிக்கின்றனர். இங்கு பூவோ, அருச்சனையோ இன்மை உணரப்பாற்று.

கடவுளுக்குப் படையல் செய்தவனே பூசாரி என்று தமிழில் அழைக்கப்பட்டான். பூசாரி, தூய தமிழ்ச்சொல்; பூஜாரி என்ற வடசொல்லிலிருந்து வந்ததல்ல.

இங்ஙனம் ஆயுழி, கடவுளுக்குப் பூசை செய்யும் பூசைத் தத்துவம் தமிழர் கண்ட தத்துவமே என்று பெறப்படுகின்றது.

# சிறுத்தொண்டர் நாயனார்

# யட்சகானம்

(கணபதி காப்பு)

திபதை

1. புரந்தரன் மாதவன் போதனும் பணிய
வரந்தரு முருங்கை மகாகண பதியே!
இளமுலை வல்லபைக் கின்பமே யளிக்கும்
வளமலி முருங்கை மகாகண பதியே!

உகந்தெமை யாட்கொளு முத்தமி யுமையாள்

மகிழ்ந்தருண் முருங்கை மகாகண பதியே!

நரகரி தேவகீ நந்தன முராரி

மருகனே முருங்கை மகாகண பதியே!

கள்ளென மதம்பொழி கயமுகம் படைத்த

வள்ளலே முருங்கை மகாகண பதியே

மனதினில் பத்தியாய் வாழ்த்தி வணங்கி

நனிசிவ னடியார்மேல் நல்லன்பி னாலச்

சிறுத்தொண்டன் தான்பெற்ற செல்வனை வாளா

வறுத்துச் சுவைக்கறி யாக்கி யீசருக்

குதவியே மோக்ஷத்தி லுற்றிடு மினிய

கதைதனை யக்ஷ கானம தாகப்

பாரினி லெங்கணும் பரவியே யோங்கச்
சீருடன் கேட்பவர் செவிக்கின்ப மெய்த
விளங்கிய காவியத் தில்வழு வாமல்
உளங்களி கூர்ந்துநா னுரைசெய்கு வேனே!

## சம்பை

2. வரும்பெரிய ஊற்றுப்போல் வாக்கெனக்கு நடக்க
வரும் ..... கற்பக விநாயகனைப்
பணிவேன்!

நாவினால் துதிசெய்து நயந்துதொழுவார்பங்கில்
மேவுமெங்கள் கற்பக விநாயகனைப்
பணிவேன்!

ஏறெனவே யெதிர்த்துச் சிறிவரு மிபமுகனை

வீறுகொண்ட கற்பக விநாயகனைப்

பணிவேன்!

(செட்டிநாட்டைச் சேர்ந்த, காரைக்குடி அருகில் உள்ள பிள்ளையார்பட்டி விநாயகர் பெயர் கற்பக விநாயகர்; மதுரை கே. புதூரில் உருவாகியிருக்கும் கற்பக நகர், இதே கற்பக விநாயகர் பெயரால்தான் அமைக்கப்பட்டது; இபமுகம்–யானை முகம்)

## திரிபுடை

**3. வள்ளிமலை தனில்வந்து மான்துள்ள**

**வள்ளிதனை மணஞ்செய்து வடிவுள**

**வள்ளிதனை மகிழ்ந்தணைந்த வேலரை –**

**வணங்குவேனே!**

இனிய சுவையுள்ள கரும்பு மமிர்தமு

மெள்ளு மெண்ணெயும் போலவே யெந்தன்

மனதிலே குடியிருந்த வேலரை –

வணங்குவேனே!

## அடதாளம்

4. சோதி நாயகா மாது நாய கா

சுரர்கள் முனிவோர் துதிபுரி

ஆதி நாயகா பாதத் தாமரை

அதனைப் பணிவேன்!

மே... யுதைத்த வீரியா

வேளை... பெரியவா

ஆதி நாயகா பாதத் தாமரை

அதனைப் பணிவேன்!

சீதளந் திகழ்கங்கை யறுகல திங்கள்பணி

சடைமுடி

ஆதி நாயகா பாதத் தாமரை

அதனைப் பணிவேன்!

## ஏகதாளம்

5. ஆயதமிழ் புகலவே எனக்குதவு அவள்தாய்

அகிலாண்ட சவுந்தரி எனக்கு

பரிவாயித் திருவருள் புரிவாயரி சோதரி

அகிலாண்ட சவுந்தரி எனக்கு

துதிகொளவே வாக்குதவி செய்வா ளருந்ததி

அகிலாண்ட சவுந்தரி யெனக்கு

## சம்பை

6. மேவும்பல கலைகளு மென்னாவி

லிருந்துதவுஞ்சஞ்

சீவியெங்கள் சரஸ்வதி தேவிபதம் பணிவேன்

நனிதவள ... நனிதவளப் பூமருவுபத்

தினியெங்கள் சரஸ்வதி புவிபதம் பணிவேன்

கல்விதனுக் காகியெந்தக் கல்விக்குந் தாயாகிக்

கல்விச் செல்வியெங்கள் சரஸ்வதி தேவிபதம்

பணிவேன்!

## வசனம்

"இப்படி, தெய்வங்களை வணங்கிப் புலவோர்களுக் கவையடக்க மேதென்று சொல்வேனெனில்", (1)

## அடதாளம்

7. பகரு நாவலர் தங்கள் முன்பொரு வகையதாய்

நான்மொழி தமிழ்க்கன மாமதிமுன்பு தாரகை நிகரதாமே

கான நாவலர்கள் தீமையாலவர் காதில்கேட்டே **நகைசெய**

நானு மிதையொரு பிரபந்த மாகவே **நவிலுவேனே**

சுரர்களெனவே யென்மனதுக்குத் **தோற்றும்படியே**

தமிழ்வல்ல

துரைகள்வல்லமை கொண்டேயிக் கதைதனைச்

சொல்லுவேனே!

## திபதை

8. வரும்பல தெய்வ வணக்கமுஞ் செய்தே

அரும்புல வோர்க்கவை யடக்கமுஞ் சொல்லித்

துங்க மாகிய சிறுத்தொண்டன்

தன்கதையை

சங்கீதத் திடந்தவறி டா்மல் தேனெனத்

தித்திக்குந் தேன் ... கானப்

பிரபந்த மாய்க்கட் டுரையாயுண்
டாக்கவே நினைவுகொண் டவனியா ரென்னில்
மாக்களர் பசுமாதை யூர்க்கு ளெந்நாளும்
வாசனாம் வீரசைவன் சிவபூசை நேசன்
ஆறெழுத் தஞ்சும் சிவபூசை நேசன்
ஆறெழுத் தஞ்சும் நெஞ்சினிற் கற்றோன்
வையகம் புகழநல் வாத்திமை புரிவோன்
துய்யகா வியமெலாம் துகடீரக் கற்றோன்
நயம துரிதமாக நாற்கவி தனினுஞ்
சுயமதாய்ப் பலதமிழ்த் துறைகளு முடிப்போன்
வேலவ ரருள்பெற்ற வெள்ளிக்கந் தய்யன்
பாலக னெனமுத்தப் பசவையான் தேவைத்
தியானித்து மாதவர் செய்தே யளித்தே
ஞானப் பிரகாசன் நவிலுகின் றானே!

## திரிபுடை

9. தேவர் தொழுமொரு தேவர் நடைவிடை
தேவர் நுதல்விழி தேவ ருயர்மகா
தேவர் திருவருள் படைத்து வளங்கெழு–
திருச்செங்காடே!

தங்கு மாழ்கடல் வாயடைந் துளசல
மருந்தி விண் ணெய்தி மேகங்கள்
திங்கள் மும்மழை பெய்திருக் கின்ற –
திருச்செங்காடே!

அன்னமழகி ... பூமுளைச்
சன்ன ... பின்பலநெல் வயலுடன்
செந்நெல் விளைகின்ற வயல்கள் புடைசூழ் –
திருச்செங்காடே!

மகாதோரண வீதியுஞ் சேரி

மாடமாளிகை

மேடை மண்டபஞ் சிகாகோபுர

மதிளுமேவிய -

திருச்செங்காடே!

ஏதேனும் விழிகழலவே நகைஇலங்கவே

தாங்குலுங்கவே

பல தேவாதியர் தாண்டவம் புரியும் –

திருச்செங்காடே!

மிகுதலம் சிவதலம் பெருந்தலந் தருதலங்

கடலாடையாயணி

செகதலந் தனிலதிக மாந்தலம் –

திருச்செங்காடே!

(திருச்செங்காடு – திருச்செங்காட்டங்குடி)

## வசனம்

"இப்படிக்கொத்த வுவமை சொல்லப்பட்ட திருச்செங்காடென்னும் தலத்தினிட வுவமை வளமையும் அலங்காரமும் பின்னையு மெப்படியோ வெனில்," (2)

## திபதை

10. மிக்கவே தியர்வாழும் வீடொரு கோடி
எக்கிய சாலைக ளிருநூறு கோடி
கலைகளை யாவுந்தான் கசடறக் கற்ற
புலவர்கள் வாழ்கின்ற பொன்மனை கோடி
மருவிய அட்ட ஐசுவரியமும் படைத்த

அரசர்கள் வாழ்கின்ற அரண்மனை கோடி
தந்திரமாய்க் காலங்கள் தானறிந் துரைக்கும்
மந்திரிகள் வாழ்கின்ற மாளிகை கோடி
உதாரித்து வாழ்கின்ற உறுதியும் பெற்ற
மதாசிகள் வாழ்கின்ற வளைவுகள் கோடி
வணிகர்கள் வாழ்கின்ற மனைபல கோடி
அணியுள பலரிடை ஐந்நூறு கோடி
திறமான செல்வமுஞ் சீருமா றாதே
மாபாலர் வாழ்கின்ற வளவொரு கோடி
தகைமை யாகிய விரததந்திரத் தோர்கள்
மகிமைமகள் விளைத்து வாழ்மடங்க ளொருகோடி
சிலைமாரன் தேவியை சிருட்டியாய்ப் படைத்த
விலைமாதர் வாழ்கின்ற வீடுகள் கோடி
இணையாக வீடுகள் எழுநூறு கோடி
வானுயர் தேரோடு மணிவீதி கோடி

இபம்பயில் கூடங்கள் எழுநூறு கோடி
சுபந்தரும் சிலாயந் தொளாயிரங் கோடி
அவரவர் வீட்டினில் அவரவர் இல்லில்
எவரெவர் மனையினும் எவ்வள வினிலும்
பத்தியாய்ப் பச்சைப் பந்தலுஞ் சிறப்பாம்
நித்திய கல்யாணமும் நித்திய சோபனமும்
மஞ்சநீ ராட்டமும் மஞ்சள் பூசும்
வஞ்சிய ரெழில்கண் டுலாவி மயங்க
வேதத்தி னோசையும் விந்தையாய்ப் பாடும்
கீதத்தி னோசையும் கிளிமொழி மடவார்
நடித்திடு மோசை நலந்திகழ் கவிஞர்
படித்திடு மோசையும் பதினெட்டு மேள
வாத்திய வோசையு மானவர் குழாங்கள்
சாத்திய வோசையுஞ் சமுத்திரம் போலே
முழங்கவே யாவரும் முசியாமல் வாழ்ந்து

தழைந்தி ருக்கும்பதி தனவனா ருற்ற
வண்ணமா மாளிகை வளம்பதி தனிலும்
விண்ணவர் பதியினு மிகுத்தசெங் காடே!

(உதாரித்து – மேன்மை செலுத்தி; மதாசிகள் – வன்மைமிகு வீரர்கள்; இபம் – சிலம்பம்; சிலாயம் – மருத்துவச் சாலை)

## வசனம்

“அநேக வேடிக்கையும் விநோதமும் அதிசயமும் கண்காட்சியும் முயற்சியும் பெருமையும் ஆங்காங்கு வைபோகங்களும் படைத்த திருச்செங்காடென்னும் தலத்திற்கு அதிபதியாகி, அந்தத் தலத்திலுள்ள சகல சின்னங்களையுங் கெர்ப்பத்திலே வைத்துக்கொண்டு நடிக்கப்பட்ட துரை யாரோவெனில்,” (3)

## சம்பை

11. மறையோரி லருள்புரியும் மருத்துவ
குலந்தன்னில்
இறைவனென உற்பவித் திருக்கும்
சிறுத்தொண்டன்
திகழுமன துரிகண்டன் புகலரிய
மறத்தண்டன்
இகழுமுலுத்தர்கள் முண்டன்
இனியசிறுத் தொண்டன்
விளம்பியிரும் புவிமன்னர் மெச்சவே செங்காடு
வளம்பதியை யாண்டுகொண்டு வாழுஞ்
சிறுத்தொண்டன்
திருத்தமுடன் மறையோதி கருத்துயர்ந்த
மறையோரில்

மருத்துவ குலம்விளங்க வந்தசிறுத் தொண்டன்
அஞ்செழுத்துந் திருநீறு மஞ்சா மலரடியை
நெஞ்சைத் திருத்தி நிதம்நினைக்கும்
சிறுத்தொண்டன்

நவமணியும் திரவியமு நாற்கலையு மாறாத
பரவுறுநற் பாக்கியமும் படைத்த
சிறுத்தொண்டன்

படிக்குமாகம சாத்திர பழமறையும்
புராணங்கள்
வடித்தெடுத்த தமிழ்பலவும் வல்ல
சிறுத்தொண்டன்!

## வசனம்

“பின்னையும் எப்படிக் கொத்தவரென்னில்”

(4)

## திபதை

12. அஞ்ஞான அருள கற்றி
யெஞ்ஞான்று
மெஞ்ஞான தீபம் விளங்குநெஞ்
சகத்தோன்
உவந்துதன் னைத்தான் உணர்ந்திட மொழிந்த
... தத்துவத்தை யடைந்தோன்
அடங்கா சானை அடக்கிய
பொறையோன்
தடஞ்சார்ந்த சைவ சமயஉத் தாரன்
மிக்குருத் திராட்சமும் வெண்பொற் பணியும்
எக்கிய பவித்திரமும் இலங்கிய புயத்தோன்
முப்பது மாதத்தில் முழுகிசந் தியானம்
சைவகா யத்திரி செபந்தனை முடிப்போன்!
நீதிமான் புத்திமான் நீணிலத் துயர்ந்த

சாதிமான் பங்கயந் தங்குமான் காத்தோன்

மோக ... ரூபன்

சேக்கு லாதிபன் திவ்வியப் பிரதாபன்

சத்திய பாடி அரிச்சந்திரனைப்

போலே

அத்திரு செங்காட் டணிநகர் வாழ்வோன்

நித்தியமு ... நிருத்தமே புரிந்து

அத்திரு செங்காட் டணிநகர் வாழ்வோன்

பெற்றவர் மற்றவர் கற்றவர் களிக்க

அத்திரு செங்காட் டணிநகர் வாழ்வோன்

வித்தகர் தீயவர் விரும்பியா விக்க

அத்திரு செங்காட் டணிநகர் வாழ்வோன்

கொத்து மலர்மணம் குறிகொண்டு வரவும்

அத்திரு செங்காட் டணிநகர் வாழ்வோன்

பத்தியு மன்பும் பணிதலு முளதால்

அத்திரு செங்காட் டணிநகர் வாழ்வோன்
அன்னமில் லார்களுக் கன்னமு மளிப்போன்
சொர்ணமில் லாருக்குச் சொர்ணமு மளிப்போன்
ஆடையில் லார்க்குநல் லாடையு மளிப்போன்
பாடிவந் தோருக்குப் பல்லக்கு மிடுவோன்
இவனொரு நாளிலு மேகமா யிருந்து
சிவனடி யாரின்றிச் செய்தில னன்னம்
பரனடி யாரின்றிப் பருகில னன்னம்
அரனடி யாரின்றி யருகில னன்னம்
சங்கட னார்க்கண்டால்
தாணுவென் றுன்னி
அவரவர் தமைப்பணிந் தங்கீ கரித்து
வளவினுக் கிட்டுப்போய் வரிசையா யிருத்தி
இளந்தலை வாழை யிலைகள் பரப்பி
அறுசுவைக் கறியுடன் அன்னம் பருப்புக்

பாயசம் கிளருமுப் பழமும்

படைத்துண்ணச் சொல்லிப் பணிந்தெழு தெய்வ

விடத்தே யிருக்குமன்னம் பிசைந்துதான்

கொள்வான்

பன்னாளு மப்படிப் பகிர்ந்தன்னங்

கொள்வான்

எந்நாளு மிப்படி யிட்டன்னங்

கொள்வான்

நல்லவன் யாவர்க்கு மின்பன் யாவர்க்கும்

உத்தமன் யாவர்க்கும் சந்தோட மெய்தி

மெத்தசீ ராகவே யிருந்தனன்

சிறுத்தொண்டன்!

## வசனம்

“தானமும் தர்மமும் பரோபகாரமும் நிதியும் தயவும் ஐசுவரியமும் தனகன வஸ்து வாகன சமிர்த்தியும் படைத்த சிறுத்தொண்ட பத்தனிட தேவி யெப்படிக் கொத்தவளோ வெனில்,” (5)

## திரிபுடை

13. கணவன் மொழி கடவாமல் கொண்ட
கணவனே தெய்வம் விருப்ப மாகிய
கணவனே கதியென்று நம்பிய – கற்புமாது!
வடிவிலே நல்ல வடிவில் மலர்மகள்
வடிவுபுகு ...
வடிவுளான் சிறுத்தொண்டன் மனசுக்கு –
வந்தமாது!

இந்திர போகம தென்னச்
சிறுத்தொண்டர்க்
கிருதயம் புளகித மாக இந்திரியம்
ஐந்தினுக்கு மிதந்தான் தரும்சுக –
மளிக்குமாது

நலங்கு லாவிய விலைமயி லென்ன
நடையை யதிர்தெழில் நடையி
னாளெங்கும்
இலங்குபுகழ் சிறுத்தொண்டன் மாளிகைக் –
கேற்றமாது

கரத்தில்வளை கடகங்கள் பாடகங்
காலில் பரஞ்சி யோலை காதினில்
தருக்குடன் பலபூ டணங்களுந் –
தரிந்தமாது!

## சம்பை

14\. தருப்போல் உதவியிடுந் தானதரச்

சிறுத்தொண்டன்

விருப்பமுள்ள மனைவிபெயர் வெண்காட்டு நங்கை!

குணங்காட்டு மிருகொங்கை பணங்காட்டு

மொழிமங்கை

தனங்காட்டு மலர்மங்கை வெண்காட்டு நங்கை!

நாட்டவர்கள் புகழச்செங் காட்டில்வாழ்

சிறுத்தொண்டன்

மீட்டிமனை யாட்டியெழில் வெண்காட்டு நங்கை!

போதவே யெப்பொழுது மதிபதி

சிறுத்தொண்டன்

மீதிலே காதல்வைத்த வெண்காட்டு நங்கை

மின்னுமுகில் பிறையம்பு வில்லாரம்

படைத்துலவு

மேன்மதுரச் செங்கரும்பு வெண்காட்டு நங்கை!

# திபதை

15. அருந்ததி கற்பும் மதிட்டமுந் தயவும்

பொருந்திய மனமும் பொதுமையு மன்புங்

குணனும் வணக்கமும் குங்கும நிறமும்

மணமலி புஷ்பம் மருவிய குழலுங்

கொஞ்சிய வார்த்தையுங் கோகிலத் தொனியும்

மஞ்சள்பூத் திலங்கிய மாமுகக் களையும்

மகிழ்விடை யந்தின்ற வனக்கிளி வாயும்

மங்கையலங் காரமும் இணைய குலுக்குங்

களங்கங்கள் காவிலுங் கருதாக் கருத்தும்

இளமையு மழகு மிவையெலாம் படைத்த

மங்கை விசித்திர மடந்தை

வெண்காட்டு

நங்கையைப் போலொரு நாரியு மில்லை

வெண்காட்டு நங்கைதோள் மேன்மேலு புளகித்

திண்காட்டு மார்புயன் சிறுத்தொண்ட

னென்போன்

பூரித் துடம்பெலாம் புளகித மாகி

பிரசங்க மாமிதில் மெய்பற்றி முற்றி

செகமெங்குந் தன்பெயர் செப்பிக்கொண் டாட

மகிபதி யெனவே வாழ்ந்திருந் தானே!

## வசனம்

"பாலும் தேனும் போலவும், பூவு மணமும் போலவும், சொல்லும் பொருளும் போலவும், உடலு முயிரும் போலவும், சிறுத்தொண்டனும் வெண் காட்டு நங்கையும் இருவரும் ஏகோபித்து மனமொருமித்து, சரச சல்லாபத்துடனே துன்பமின்றி, இன்ப மெய்திக் கூடிவாழ்ந்திருக்குங் காலையில், புத்திர சந்தானமில்லாமல் வியாகுலப்பட்டுக் கொண்டிருக்க, அப்போது பரமேசுவரன் கடாக்ஷத்தினாலே வெண்காட்டு நங்கை கர்ப்பமாகினள்!" (6)

## சம்பை

16. கண்கள் மூன்றுடைய சிவன்கருணை
செய்யவேயிந்தப்
பெண்கள்நாயகி வயிற்றில் பிள்ளை
யுண்டானாள்
குறைகளெல்லாம் தீர்க்க மறுவில்லாக் கதியெய்தப்
பிறைநுதலினாள் தலைச்சன் பிள்ளை
யுண்டானாள்
ஏதுசெய்வே னெனக்குப் பிள்ளையில்லை
யென்றலைந்த
பேதமையில் முதல்முதல் பிள்ளை
யுண்டானாள்
தெள்ளமுதை விண்டவாந்தி திரண்டுகுளிச்
சேயிருந்து
பிள்ளையில்லா தவளும் பிள்ளை
யுண்டானாள்

கையி லெடுத்தணையக் கொஞ்சக்காண்

போம்பிள்ளை

என்றபெய் வளைக்கைநல்லாள் பிள்ளை

யுண்டானாள்!

## வசனம்

"சிவ கடாக்ஷத்தினாலே நாம் இம்மாத்திரம் பிள்ளை யுண்டானோமேயென்று வெண்காட்டு நங்கை மனதிலே மகா சந்தோஷத்தையடைந்திருந்தாள்". (7)

## திரிபுடை

17. இந்தச் செய்தியைக் கேட்டுச்

சிறுத்தொண்டன்

எனதுதவம் ஈடேறிற் றோஇனிச்

சிந்தை யெண்ணமுமில்லை எனமனந்
தேறினானே!

களிப்புத் தரும்பிள்ளை பெறவும்
வளர்க்கவும்
கடவுள் திருவருள் வழங்கிற்
றென்குடிக்

கிளப்பமில்லை யினியெனத் தன்மனதில்
எண்ணினானே!
மனைவி பிள்ளை யுண்டாக்கி னாளென்று
மலரயனும் செவிப்படவே
வியாகுலம்
யெனும்வினைய கண்ணுளத்திலே யின்ப
மெய்தினானே!

செய்யுந் தருமமுஞ் செய்யும் பூஜையும்
செய்யுந் தவங்களும் பலித்து
தெனக்கினி
ஐயமில்லை குடிவிளங்கு மெனத்திட
மாகினானே!
சிந்தை மகிழ்வெய்தி மனமுங்
களைகளுஞ்
சிறந்த பூடணத் துகையும்
பரிகளும்
வந்த சங்கமர் தமக்கெல்லாம்
மெத்தவழங்கினானே!

(சங்கமர் – இலிங்கத்தை மார்பில் தரித்த வீரசைவர்கள்)

## வசனம்

"மனைவி மைந்தனுண்டான விசேஷங் கேட்டுச் சிறுத்தொண்டன் தனக்குள்ளேதான் மனக்களிப்பெய்தி, சிவனடியாருக்கு வேண்டிய தான தருமங்களைப் பண்ணிக் கொண்டிருந்தனன்." (8)

# வெண்காட்டு நங்கைக்குப் பிள்ளை பிறந்தது!

## திபதை

18. இவனு மிப்படி மகிழ்வெய்தி யேயிருக்க
கவலையை யொழிந்த வெண்காட்டு
நங்கைக்கு
மசச்கையு முளதாய் மதிமுகம் வேர்க்குற
அசைத்திடும் கொங்கை அடிகனத் தெழும்ப
அருந்தேமல் தங்கம் பொன்னா
மெனவிளங்க

அலரும் கருநாகம் போல்மற்

றொழுங்கிலங்க

ஓமம் வளர்த்துவந் துற்றவர் களிக்கச்

சீமந்தஞ் செய்துபின் திங்கள் ஈரஞ்சில்

காணிக்கு உரமாக்கக் கனியிதழ் நங்கை

மாணிக்கம் போலொரு மகவையீன் றனளே!

## சிந்து

19. பிள்ளை பிறந்ததுநல்ல தெள்ளு மணிபோலே

வள்ளலெனுஞ் சிறுத்தொண்டன் உள்ளங்களிக்க –

பிள்ளை

காலசக்கி கையசக்கி கண்சிமிட்டி

வாய்மலர்ந்து

கோலமுலைப் பாலுண்ண கூவாகூவா என்றே –

பிள்ளை

நல்லபிள்ளை யிதுவென்று நயந்துதமர்க் கிளைமுதற்

கொண்டே

எல்லோரு மாவலாய் எடுத்தணைத்துக்

கொஞ்ச – பிள்ளை

அழிவில்லா தருமமிவன் ஆமென்றே

யனையவர்களு

மொழியுஞ் சிறுத்தொண்டனுக்கு

மோக்ஷமுண்டாக – பிள்ளை

குலாவியே குளிப்பாட்டிக் கோதாட்டிச் சீராட்டி

நலமான வெண்காட்டு நங்கை

திருவயிற்றில் – பிள்ளை

## வசனம்

"சிறுத்தொண்டன் பிள்ளையுண்டாச்சு தென்று அளவிடற்கரிய சந்தோடத்தை யடைந்து தன்னிட முக்காலியிலே வந்து இரத்தினக் கம்பளியின் மேலெழுந் தருளியிருக்க சமஸ்தமானபேரும் வந்து கைமுகந்து புடைசூழத் தன் சமூகத்திலிருக்கின்ற பேர்களுக்கும் அந்த ஸ்தலத்திலே யிருக்கப்பட்ட பேர்களுக்கெல்லாம் அபாரியாகக் கொண்டு சர்க்கரை வழங்குவித்து பின்னைபு மேது செய்தனன்" (9)

## திபதை

20. திவ்விய மாமந்த திருத்தலத் துள்ள
தெய்வங்களுக் கெல்லாம் சிறப்பிடு வித்து

விரும்பிவந்து யாவரும் வேடிக்கை பார்க்க
திருந்தவே நெடுந்தேர் திருநாள் நடத்தி

சிவாலயங் களுக்கெலாம் செம்பொற் கபாடம்
அவரவ ருடனே யழைத்து அன்பாக

கருணை புரி சிவனார்தமைப் பூசைதனைச் செய்யத்
திருமஞ் சனக்குடம் செம்பொன்னா லமைத்து

மறையோர்க்குத் தானம் வழங்கிச்
சங்கமர்க்கும்
நிறையவே வேண்டிய நிதிதனை யளித்து

வந்திருந் தேகவி மாரியாய்ச் சொரியுஞ்
செந்தமி ழோர்க்குந் தியாகங்கள் கொடுத்

துசித்துக் களைச்சுமுகம் வாடி மெத்தப்
பசித்துவந் தோர்க்கன்ன பானம் பாலித்து

வளமலி விராகனும் ஆடையும் பணமும்
அளியளி சூரையாய் வாரியே விட்டு

மகனுண் டாச்சோவென்று வந்துகேட்
போர்க்கு
மிருபலக் கலைகளும் வெகுமானம் பண்ணி

பதிதனில் விளையாடும் பாலகர்க் கெல்லாம்
உதவுங் கடலைகளும் வரிசை
வெல்லங்கள்

ஆடல்கள் பார்த்துள்ள மானந்தம் பொங்கப்
பாடல்கள் கேட்டுப் பயன் விசாரித்து

மாறாத கிரகணம் மகம்மேரு வென்ன
வீறாய சிறுத்தொண்டன் வீற்றிருந்
தனனே!

**விசுவகர்மர் தங்கத்தொட்டில் செய்து தரல்!**

## வசனம்

"இவ்விதமாயிருந்த சிறுத்தொண்டன் விசுவ பிரம்மாவின் வமிசத்தாரை யழைப்பித்து, தொட்டில் வேணுமென்று சொல்ல, அவர்கள் நல்லதென்று அக்கசாலையே போய்ப் பத்துமாத்துத் தங்கப் பொன்னாலே தொட்டில் உண்டுபண்ணி, அந்தத்தொட்டிலெங்கும் நவரத்தினங்களும் கசிதம் பண்ணி, உச்சிதமாகக் கொண்டுவந்து முன்னே வைக்க, சந்தோஷப்பட்டு, அவர்களுஞ் சாறு நடுக்கட்டு தகட்டீப்பாகை கிரி மதகளாய் நல்ல பட்டுப்பட்டாவளி சீனி சீனாம்பரங்கள் ஹஸ்தகடகம் வாகுபுரிபில்லை சரப்பளி பதக்கம் முத்துத்துராய் குதிரை இவைகளெல்லாம் வெகுமானம் பண்ணி யனுப்பி பிராமணரை யழைப்பித்து நாமகரணம் பண்ணி, அந்தப் பிள்ளைக்குச் சீராளன் என்று பெயரிட்டு நல்ல அமிர்த யோகத்திலே தொட்டிலேற்றுவித்து, வந்த பிராமணருக்குத் தட்சணை தாம்பூலம் உண்டானதும் சமர்ப்பித்து விடைகொடுத்தனுப்பி, சதியுந் தானுஞ் சுகத்திலே யிருந்தனர்!" (10)

## கந்தபத்தியம்

21. மங்கையர்கள் சேகர மதாகிய மடந்தை
துங்கவிழி வேல்மருவு சூதுநிகர் கொங்கை
கங்குல்புரை யோதி மதியாகிய
வெண்காட்டு
நங்கைஇள மைந்தனை நயந்து
கொஞ்சுவாளே!

## அர்த்தச் சந்திரிகை

22. சுயமறைவல மருத்துவர் குலக்கொழுந்தே
துயாரனும் வினைகெட தோன்றியமருந்தே
மலரே மலர்தனில் டிரும்பரிமளமே
நலமே குலவிய நம்மேருவளமே
மருவியே செய்கலி மாற்றியமதியே
வருமுமை யருள்செய் வருஞ்சந்ததியே!

## வசனம்

"என்று சொல்லிக் கொஞ்சி முலைப்பால் கொடுத்து மார்போடணைத்துக் கொண்டு கண்ணோடு கண்ணொத்தி நெத்திக்கு நீலக் கொப்பணிந்து பின்பும் மகனைத் தொட்டிலில் வளத்தி, தாலாட்டுவாள்!" (11)

## குள்ளடித் தாலாட்டு

23. ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ!
சீரான வேதியர்வாழ் செங்காடா கண்வளரீர்!
— ஆ

கன்னிக் கடலைக் கலக்கிவந்த
கண்மணியே
சொர்ணமே யெங்கள் துரையேநீர் கண்வளரீர்
— ஆ

தித்திக்குஞ் செங்கரும்பே தேனே எமதுகுடி
விருத்திக்க வேவந்த வாழ்வேநீர் கண்வளரீர்

— ஆ

நந்தா மணிவிளக்கே நல்லசுவை முப்பழமே
சிந்தாத தெள்ளமுதே சேயேநீர் கண்வளரீர்

— ஆ

சீல மிகுத்த செழுமறையோர்
வங்கிடத்தில்
கோல மிகுத்த குலக்கொழுந்தே
கண்வளரீர்

— ஆ

துய்ய சிறுபாலா துங்கா அழவேண்டாம்

அய்யா வடிவழகா அண்ணாநீர் கண்வளரீ

— ஆ

விழியிலே நீர்தும்ப மென்பவள

வாய்திறந்தே

அழவேண்டாஞ் சிறியேங்கள் அப்பாநீர் கண்வளரீர்

— ஆ

தந்தைதாய் பின்னுந் தமர்க்கிளைகள்

யாவர்களுஞ்

சிந்தை மகிழவந்த சீராளாநீர் கண்வளரீர்!

— ஆ

## வசனம்

"எனச் சொல்லித் தாலாட்டி, வெண்காட்டு நங்கை குணகித்தனகிக் கொண்டிருக்குங் காலையில், தவழ்ந்து தத்தடியிட்டு கலுகுலுவென்று மழலைப் பேச்சும் பேசி வளர்கின்ற ஐந்து பிராயத்திலே சீராளனுக்கு உபநயன விவாகமும் பண்ணிவைத்துப் பின்னேது செய்தனன்".

(12)

## திபதை

24. சிறுதுழை யிருந்து தெய்வத்தை வாழ்த்தி
உறுங்கமலப் போதுறை முகம லர்த்தி
யோரை செயப்படுயொரு ளுளத்தினி லழைத்து
விரைவின்றி நெஞ்சினில் வெகுளுத லின்றி
விரும்பியே திருவருள் மிகுத்து வழாமல்
இளஞ்சிறு பாலர்க ளிதயங்க ளறிந்து
திகழுமெக் கலைகளுந் திட்டமா யிருந்து

மகிழ்வுடன் கற்பிக்கும் வாத்திமை யோனை
யிட்டுவந் தவர்தமக் கினியபொற் சரிகைப்
பட்டுப் பட்டாவளி பலபூ டணங்கள்
மெய்ப்பாகப் பாக்கியம் வேண்டிய தெல்லாம்
கற்பகக் காவைப்போல் கட்டளை செய்ய
தெய்வ ரிடமாய்க் கல்வியாவும் படிக்க
சிவபக்தி பெறவந்த சீராளன் தன்னை
மங்கள நாளினில் வாசிக்க வைத்தான்
செங்காட்டில் வாழுஞ் சிறுத்தொண்டன்
தானே!

## வசனம்

"சீராளன் காலமே யெழுந்திருந்து, பள்ளிக் கூடத்துக்குப் போய், வாத்தியாரை நமஸ்காரம் பண்ணி, அவர் சமூகத்திலிருந்துகொண்டு படிப்படி தினமும் சகலகலைகளை யோதிக்கொண்டிருக்க, இப்பால் பரமேசுவரன் சிறுத்

தொண்டனிட அன்பு சோதிக்க மனதிலெண்ணி, இவன் நம்மிட அடியார்களில்லாதே அன்னம் கொள்ளுகிறதில்லை யென்று மகாவிரதம் பிடிச்சுக் கொண்டிருக்னிறான் அல்லவோ, நல்லது என்று மாயாவிநோத லீலை செய்தனர்"

(13)

## சம்பை

25. ஆயபர மேசுவரர் அடியார்க

ளெல்லோரும்

மாயமாய் மறைந்திருக்க மகிமைவி

ளைத்தனரே

திங்களணி வேணியர்க ளங்கசிவ

னடியவர்கள்

எங்குமிலை யெனவுமொரு சங்கைவி

ளைத்தனரே

மரணமொடு பிள்ளையெனு முரணொழித்த

சங்கமர்கள்

தரணிதனி லில்லையென சமயம்வி

ளைத்தனரே!

## வசனம்

"ஈசுவரர் தம்மடியார்கள் பூமியின் நேரிலே எங்குமில்லாமல் அப்படிக்கு மாய்கை பண்ணிக் கொண்டிருக்கச் சிறுத்தொண்டன், ஈதேது மூன்றாஞ்சாம மாச்சுது, நம்மிட சாப்பாடு வேளைக்குத் தன்னிச்சையே வரப்பட்டவிச் சங்கமர் இன்றைக்கு என்ன இன்னமும் வரக் காணோமென்று வெளியே வந்து முகசாலை வாசலிலே யிருக்கப்பட்ட தூதுவரை யழைத்து, சங்கமர் ஒருத்தரும் வரவில்லை, நீங்கள்போய் பராமரித்து அழைத்துக் கொண்டு சீக்கரமாய் வாருங்களென்று அனுப்பிவித்தனன்"

(14)

(சங்கமர் – சிவனடியார்)

## திரிபுடை

26. போன தூதுவர் சீக்கர மாகவே
போய ருஞ்சதுர் வேத
மந்திர
தியான மறையவர் வீதி யெங்கினும்
தேடிப்பார்த்தார்!
குறைவிலா சௌபாக்கிய முஞ்செழுங்
குதிரை யானை பதாதி
படைத்துள
திறமை மன்னவர் வீதி யெங்கினும்
தேடிப்பார்த்தார்!

வையகஞ் தனையா ளுமரசர்கள்
மகிழக் காலங்கள் மூன்றுங்
கண்டுரை

செய்யு மந்திரிகள் வீதி யெங்கினும்
தேடிப்பார்த்தார்!

இழைக்கும் நவரத்ன பட்டை வலிமையும்
இதழும் படைத்த அளகை
யானெனச்
செழித்த வணிகர்கள் வீதி யெங்கினும்
தேடிப்பார்த்தார்!

எவரும் வெளிவரக் கரிய கம்மழை
இருட்டில் வயல்முனை வாரிக்
கொணர்ந்தனன்
சிவனுக் கருள்மா பாலர் மருகெங்கும்
தேடிப்பார்த்தார்!

மடங்க ளானைகள் மடங்க ளெங்கினும்
வரிசை வரிசைய தாய்நு
ழைந்துளத்
திடங்கு லாவிய தூத ரானவர்
தேடிப்பார்த்தார்!

தெருக்கள் மூலைகள் முடக்குச் சந்துகள்
செறித்த கோயில்கள் கடைகள்
பிறவும்மற்றும்
திருச்செங் காடெங்கும் திரிந்து சோதித்துத்
தேடிப்பார்த்தார்!

## வசனம்

"தேடிப்போன தூதுவர் வந்து, சுவாமி! ஊரெங்கும் ஆராய்ந்து தேடிப்பார்த்தோம். சங்கமர்கள் பரிசிதமாயில்லை. அஃதென்ன மாயமோ? தெரியப் போகாதென்று சொல்லச்

போகாதென்று சொல்லச் சிறுத்தொண்டன் கேட்டு, நாம் என்ன குறை பண்ணினோமோ? ஆனால் இதுவும் பரமேசுவரனிட செயலென்று எண்ணிக்கொண்டு, பஞ்சாட்சரமாகிய திவ்விய போஜனத்தை யுட்கொண்டு அன்றிரவு முழுவகும் நித்திரையில்லாமல் இருந்து, ஆதிகாலமே யெழுந்தருளி, திரும்பியுந் தூதுவரை யழைத்து சங்கமர்க ளெங்கே யிருக்கிறார்களோ நீங்கள் தேடியழைத்து வாருங்களென்ன, நல்லது புத்தியென்று தூதுவர்கள் வெளிப்புறப்பட்டு, எட்டுத்திக்கும் பதினாறு கோணமும் தேடிப்பார்த்து இல்லாதவாறு கண்டு, திரும்பிவந்து இந்த பூமியிலே சங்கமர்கள் ஒருத்தருமில்லையெனச் சிறுத்தொண்டன் மனதிலே மெத்தக் கிலேசமெய்தி, இப்படி மூன்று நாளாறு பொழுது நிர்சலமிருந்து இனி நாமானாலும் போய்த்திரிந்து சங்கமர்களை யழைத்துக்கொண்டு வரவேணுமென்று கருதிப் பயணமாயினன்."

(15)

## சம்பை

27. பொங்கமுடனே பலர்கள் புடைசூழச் சங்கமர்கள்

செங்காட்டுச் சிறுத்தொண்டன் தேடிப்

போயினனே!

தவமகிமை மிகுவீர சங்கமரைச்

சிறுத்தொண்டன்

சிவிகைமிசை யேறிக்கொண்டு தேடிப்

போயினனே!

இருமூன்று பொழுதன்னம் பருகாம லேயிருந்து

திறமான சங்கமரைத் தேடிப்

போயினனே!

## வசனம்

"சிறுத்தொண்டன் சங்கமரைத் தேடிப்போயி ருக்கையில், பரமேசு வரன் நம்மடியார்கள் எங்குமில்லாத படிக்கு மாய்கை பண்ணி வைத்து இவன் சிவனடியாரின்றி

அன்னங் கொள்கிறதில்லையென்று வைராக்கியம் பிடிச்சுக் கொண்டு ஒருநின்ற மயமாயிருக்கிறான்; ஆனால் இவன் நமக்கு உகந்த பக்தனாமென்று மெத்த தயவாய்ச் சிறுத்தொண்டன் அவ்வளவுக்கு வரத்தக்கதாக நினைவு கொண்டங்கேது செய்தனர்”

(16)

## திபதை

28. கங்கையுந் திங்களுங் களந்திகழ் கறுப்பும்
துங்க மாகிய புயந்தங்கு கட்செவி
மயன்புயர் தனிலேயிரு தோளு
மொண்பிறை
முகம்ஐந் தினிலோர் நான்கு முகமும்
நன்னுதல் பயிலவே நீலநாட்டமும் கரத்தில்
மண்ணிய சூலமு மான்மழுப் படையும்
நன்றிய கபாலமும் நாக கங்கணமும்

கொன்றையந் தாரும் வெண்கோட்டி யவுரியும்
எலும்மி னாபரணமு மிடத்தமர் மாதும்
இலங்கும் வெண்விடையுமிவையெலா மறைத்துச்
செங்காவி தோய்த்த சீரொரு
வேட்டிமின்ன
மங்காத நீறு மதிப்பிறப்பைக் காட்ட
காதினிற் குண்டலங்க கதிரொளி வீசக்
மீதினிற் செந்தூசு மிகப்பிர காசிக்க
விளங்கவெழு போர்ச்செச்சை மார்பினி லிலங்க
விளங்கிய ருத்திராக்ஷம் மெய்யெங்கும் இலங்க
அரையினில் கஞ்சுகச் சதிது லங்க
சாபதக் கச்சைத் தருந்தொனி பொங்க
தரிந்து மெய்யுதர பந்தனமும் புனைந்து
விரிந்துலாம் ஈர்ப்பீலி மென்கரம் பிடித்து
மாத்திரைக் கோலொன்று வாங்கிச் சுழற்றி

சாத்திரப் பொத்தகந் தான்கரத்தி லேந்தி
மேவிய சங்கம வேடங்கொண் டமைந்த
பாவடி தான்ஊன்றி பருப்பதம் விட்டு
மெத்த சிறுத்தொண்டன் மேலுளம்
விரும்ப
ஆதர வாங்கதி யளிக்கவே யென்று
நொடிதனி லேயிந்தப் படிமிசை யெய்தி
நடைகொடு நடந்து கடந்துல் லாசமதாய்
அத்தலத்தில் யாருங் கண்டங்கீ கரிக்க
சித்திரை புனைந்த தினந்தனி லேதான்
அற்பொருள் எனவி டாயாய்த்
தற்பரனார் சிறந்த செங்காட்டுத்தெருவில்
வந்தனரே!

## வசனம்

"செங்காட்டுத் தெருவில் வந்து பரமேசுவர னென்னுஞ் சங்கமத் தேவர் துரீலென்று சிறுத்தொண்டனவ் வளவுக்குப் போய் நின்றுகொண் டேதுசொல்லி அன்னங்கேட்டார்"

(17)

## சம்பை

29. ஆரம்மே வளவிலே ஆரம்மே மனையிலே
ஆரம்மே யகத்திலே ஆரம்மே வீட்டிலே
புறஹர விடநாக பூடணா சங்கரா
ஹரஹரா சிவசிவா ஆரம்மே வீட்டிலே
வருவோர்க் கமுதளிக்கும் வண்மையீ
தெனக்கேட்டு
பசியால்வந் தோமிங்கே ஆரம்மே வீட்டிலே

## திபதை

30. என்றழைத் தமைந்த ஈசுவரன் கேட்க
வென்றிகூர் களிப்புடை வெண்காட்டு நங்கை
அச்சத்தங் கேட்டுள மானந்த மாகி
இச்சித்த மேதென் னெழுந்தி ருந்து
வாசிலில் வந்தந்த வள்ளலைக் கண்டு
நேசமா கதிர்கண்ட செங்கமலம் போல
முகமலர்ந் தவர்பத முளரியை வணங்கி
மிகமகிழ் வெய்தித் திவையுமைப் பார்த்தால்
மருவிலா வெள்ளி மலைமிசை வாழும்
இறையவன் போலே யிருக்குதிங் கேநீர்
வரவும்யான் முன்செய்த மாதவம் தானோ!
புரையிலாயே நித்திய புண்ணியந் தானோ!
அய்யரே வாருமென் றாசனம் போட்டு
மெய்யரே ஆசன மீதிரு மிப்போ

| | | | |
|---|---|---|---|
| அரைக்கணந் | தன்னிலே | யாகுது | சமையல் |
| தருக்குட | னிளைப்பாறித் | தானே | மெள்ளப் |
| போவீர் | மனத்தினில் | அன்பு | மலித்த |
| பர்த்தாவும் | இனிச்சற்று | நேரத்தில் | வரப்போறார் |
| ஏதுக்கு | நிற்கிறீர் | இணையடி | நோக |
| ஏதுக்கு | நிற்கிறீர் | இந்நேர | மட்டாய் |
| இருமிரும் | தேவரீர் | இருமிரும் | சுவாமி |
| இருமிரும் | வஸ்துவே | யிருமிரு | மிங்கே |
| எனச்சொல்ல | வந்தவர் | இயம்புவா | ரம்மே |
| கனக்கர | மான | கணவனில் | லாத |
| மனைக்குள் | ளிருக்கவும் | மரியாதி | யல்ல |
| தனித்தவ | னிருப்பது | தர்ம | மல்ல |
| புல்லுதற் | குரிய | புருட | னில்லாத |
| இல்லி | லிருப்பது | யெனக்கட | வல்ல |
| நாட்டிலே | திரிகின்ற | நண்பனில் | லாத |

| | | | |
|---|---|---|---|
| வீட்டி | லிருப்பது | மேன்மைய | நல்ல |
| சகந்தனி | லேஆள | னில்லாத | வளவில் |
| உகந்தி | ருப்பது | நமக்கோக் | கியமல்ல |
| உரியவ | னில்லாத | உன்மனை | தனிலே |
| கருதியே | யிருப்பது | கனதந்தி | யல்ல |
| தேசாந் | திரிநாம் | பரதேசியிவ் | வூருக்(கு) |
| ஈசான | மூலையி | லிம்மென | ஞ்மிறுக் |
| குரைசெயும் | பிள்ளையார் | கோயில்முன் | ஆத்தித் |
| தருவின் | கீழேபோய்த் | தனியாக | வேநாம் |
| இருக்கிறோந் | தாயே | எனச்சொலித் | திரும்பி |
| விருப்பமாய்க் | கடவுள் | மேனடந் | தனரே! |

## வசனம்

"நடந்துபோய்ப் பரமேசுவரன் பிள்ளையார் கோயில் முன்பாக வளர்கின்ற ஆத்திமரத்தின் கீழே யமர்ந்திருக்க, அந்த

வேளையிலே தேடிப்போன சிறுத்தொண்டனவ்வளவுக்கு வந்து பெண்சாதியுடனே யேதென்று சொல்லுவான்"

(18)

## ஏகதாளம்

31. என்னடி நங்காய் ஏதுசெய் வேனினி
என்றுயர் சங்கமரைத் தேடியுங் காணேன்
சவையாய்த் தெருவூரின் வாச லேநனி
சிவனடி யார்களைத் தேடியுங் காணேன்
வகைவகை யாக வருந்தல நாடுகள்
செகதல மெங்கினுந் தேடியுங் காணேன்!

## வசனம்

"எங்கெங்குந் திரிந்து தேடிப்பார்த்தாலும் சிவனடியார் ஒருத்தரைக் காணேன். இனி வழி எப்படியென்று

சிறுத்தொண்டன் கேட்க, வெண்காட்டு நங்கை ஏது சொல்வாள்,"

(19)

## சம்பை

32. ஏதுக்குக் கலங்குறீர் நீதியுள்ள சங்கமர்கள்
போதவே நீர்தேடப் போன
வேளையிலே
பொங்கமுடன் அன்னங்கேட்டுத் தங்குமிந்த
வாசல்தனிச்
சங்கரனைப் போலவொரு தம்பிரான் வந்தனரே!
வந்தவர்வெவ் வாய்திறந்திவ் வளவிலே யாரம்மே
சிந்தைமகிழ்ந் தரகரா சிவசிவா என்றார்
என்றுசொல நானும கத்திருந்து வாசலில்
கன்றிவன்கண் களிகூர கண்டு
தவித்திருந்தேன்

வணங்கியா சனம்போட்டு வாருமிரும் சுவாமிசுசி

யிணங்குமன் ணங்கொண்டு மெள்ளயிளைப்

பாறிப்போவீர்

எனவந்த சங்கமரு மிறையவனில்

லாவீட்டில்

மனங்கொண் டிருப்பது நம்க்குமரி

யாதையல்ல

கொழுகுநனிப் பிள்ளையார் கோவில்முன் ஆத்திமர

நிழலிலடைந் திருக்கிறோம் நழுவி யேகாமல்

அம்மேயென் றுரைபுரிந் தகன்றுபோ னாரந்த

பெம்மானைக் கடுகிப்போய்ப் பேணி

யழையுங்காண்!

தரு

33. என்னவே சிறுத்தொண்டன் களிப்பெய்தி

யெழுந்திருந்து

அன்னமேபெண்கள் நாயகமேயென்

றணைத்துவாய் முத்தமிட்டான்

மெல்லிய யெந்தன்சிந்தை

வியாகுலம்விண் டோடயெனக்கு

நல்லவார்த்தைகள் சொல்லினைமென்

மொழிஒன்றிய கோகிலமே

என்றுசொல்லிக் கொண்டாடிப்

பண்டாரத்தை யிட்டுவரவேதான்

நன்றுசேர் பிள்ளையாராலயம் தன்னைநாடி

நடந்தனனே!

## வசனம்

"சிறுத்தொண்டன் பிள்ளையார் கோயில் முன்பாகப் போய் ஆத்திமரத்தின் கீழ் எழுந்தருளியிருக்கின்ற

தம்பிரானைக் கண்டு ஏதென்று சொல்லி வணங்கித் தோத்திரம் பண்ணுவான்.''

(20)

## சிந்து

34. சரணம்சரணம் சங்கமதேவர் சரணஞ் சரணமப்பா

சரணம் விபூதிமெய்யா சரணம் இங்கிதனா

கரிகர அங்க லிங்க சையோகா

மெத்தசிவ கோபா தீதெனும் பவகோபா –

சரணம்

குண்டலம் இட்டகாதா மண்டலந்

தொட்டகாதா – சரணம்

குங்கும நிறத்தூயா சங்கமப் பிறப்புராயா

– சரணம்!

## சம்பை

35\. இந்தவிதமாய் வணங்கி யேத்தியே
யந்தணனும்
எந்தையே யமுதுகொள்ள எழுந்தே
யருளுமையா
தம்பிரானே வீர சைவநெறி வழுவாத
என்பிரானே யமுதுக் கெழுந்து
அருளுமையா
மரத்தின்கீழ் இருப்பதென்ன வாரும்பசி
முகமாகி
இருக்கிறீர் அமுதாச்சு எழுந்து
அருளுமையா!

## வசனம்

"இப்படிச் சொல்லி யழைக்கத் தம்பிரான் ஏது சொல்வார்" (21)

# திபதை

36. சீரிலங் கியபுகழ் சிறுத்தொண்ட பத்தா
வாரும்பிள் ளாயுனைப் போல
வையகத்தில்
யாருமில் லைநீயே ஏதுக்கெமை யிப்போ
அழைத்தாய் நல்லசூ வருகிறோம் நாடி
நான்கேட்ட தளிக்கஉன் கையிலேயாகு
மோவென்ன
களிப்புடன் அந்தணன் கழறுவான் சுவாமி
எனதுயிர் கேட்டாலும் ஈவதே யல்லாங்
பின்னுக் கடைவதுநம் சொப்பனத்திலு மில்லை
உமதுளத் துள்ளதே ஒளியாம லிப்போ
எமதுடன் சொல்லுமுமக் கென்னாணை யென்ன
உன்குரு பெரியவ னுதவு சேயாகி
தாயாகித் தலைமகன் தானாகி யஞ்சு

| | | | |
|---|---|---|---|
| பிராயமு | முண்டாகிப் | போழ | காகிப் |
| புராதன | நூல்கற்ற | புத்திர | னாகிப் |
| படிவத் | துறுப்பினிற் | பழுதில | னாகித் |
| திடமிக்க | வேதியர் | சந்ததி | யாகி |
| அறிவுமெய்ஞ் | ஞானமு | மன்புமுண் | டாகித் |
| திறமையுஞ் | செல்வமுஞ் | சீருமுண் | டாகி |
| தழைத்தோங்கி | வாழுந் | தமர்க்கிணை | பின்னும் |
| மொழிந்திடு | மவர்வாக்கும் | முத்துமுத் | துமாகி |
| இருக்கிற | பிள்ளையை | இட்டுவந் | துகந்து |
| தருக்குடன் | அறுத்துத் | தான்சம்பிர | மாதாகத் |
| தப்பாம | லேகறி | சமைத்தெமர்க் | கமுது |
| படைத்திடில் | நாம்வந்து | பருகுவோ | மப்பா! |
| இடத்திடமுண் | டோநோக்கி | இயம்பு | நீயென்ன |
| மெய்ப்பத்தன் | கேட்டு | விரும்பி | யாலித்து |
| அப்படியே | யாகு | தண்ணலே | யென்று |

வேண்டி வணங்கி விடையெனப்

பெயர்ந்து

மீண்டனன் தன்மனை மேலுளங் கொண்டே

## வசனம்

"மீண்டு மனைவரும்போது சிறுத்தொண்டன் அங்ஙனே ஒரு நினைவு கொண்டு திரும்பிப் பிள்ளையார் கோவிலுக்குப் போய் விக்கினேசுவரனைக் கண்டு, தண்டனிட்டுப் பிரார்த்தனை பண்ணிக்கொள்வான்"

(22)

## திரிபுடை

37. ஆனை முகத்தரசே யென்மனைவி

நெஞ்சகமு மென்நெஞ்சகமும்

பொலிந்திடத்

தானுளங் கஎிகூர்ந் தென்மீதினில் –

தயவுபாரும்

ஐங்கரப் பிரபல னோங்கள்

நங்கை மனமுமென் மனமு மொருமிக்க

தங்குமுனது கடாக்ஷம் தான்வளர – தயவுபாரும்

நானுளந் தனில்நி னைத்த காரியம்

நன்மை யாயனு கூல மாகவே

நீநயந் தருள்பார் கண்டாய் – அபிமானமாக

## வசனம்

"பின்னையு மநேகமாய்த் தோத்திரம் பண்ணி, விக்கினேசுவரர் என் மனத்தைப்போலவே என் பெண்சாதி மனது இருந்தால் உமக்கு நூறு பொன்னேர்ந்து ஆடம்பரத்துடனே சிறப்பிடுவிக்கிறேன். இதற்குப் பிசகில்லை யென்று வசனித்துச் சீக்கிரமாய் வளவுக்கு வந்தனன்"

(23)

38. வளவுக்கு வந்தவன் மனைவிதன் நெஞ்சகம்
ஏற்கவே நயமுடன் இச்சையும் பேசித்
தம்பிரான் தன்னுடன் சாற்றிய தெல்லாம்
வகைவகை யாய்க்கூறி மாமயி லேநான்
மகிழுவெவ் வூரினில் மைந்தரைத் தேடி
வாங்கிவா ரேன்பொன்னை மலியவே கொடுவா
தங்க மோர்சாடி திரவியந் தாடி
என்னவே நங்கையு மியம்புவாள் நமது
மன்னரே உமக்கென்ன மதியிலை யோதான்
விளாம்பழ மில்லைகாண் விலைக்குநீர் கொளவும்
பளாபளா உமக்கிது பைத்தியந் தானே ?
மறுக்கவே கனக மழைசொரிந் தாலும்
அறுக்கவே பிள்ளையை யளிப்பரோ உலகில்
இருநிதிக் காசைப்பட் டிலங்கிய வாளால்

அரியவே பிள்ளையை யளிப்பரோ உலகில்
இல்லாமை யால்நொந்த ஏழை யானாலும்
கொல்லவே பிள்ளையைக் கொடுப்பரோ விலைக்கி ?
ஏதுகாண் பரியாச மிப்படி யுண்டோ ?
ஏதென்று சொல்லுவே னிதுகா ரணிக்கம்
சோபன மிக்கநந் துங்கமா மனையில்
தீப மிருக்கச் சோதி
தேடுவானேன் ?

மிகுத்திடுந் துரித மேவிய வொன்றை
அகத்திலே யிருக்கநெய்க் கலைந்திடு வானேன் ?
வேட்டபோ தனக்குத்தான் வெண்காய் கறிகள்
தோட்டத்தி லிருக்கநீர் தூரப்
போவானேன் ?

மைந்தன்சீ ராளனை வரவழைத் தறுத்து
விந்தையாய்க் கறியாக்கி விமலார்க் கமுது

படைத்திடு வோமன்பாய்ப் பாங்கான பள்ளிக்
குடத்துக்கு நீர்போய்க் குமாரனை யழைத்துக்
கொண்டாடி வாரும்போங் கூசாம லென்ன
தொண்டனு மெழுந்துமே துள்ளிக்கொண் டாடி
ஆடினான் பாடினான் அணுகிய துயரைச்
சாடினான் மெத்தவுஞ் சந்தோஷ மானான்
நினைத்திடுங் காரியம் நினைவேறிற் றென்று
மனக்கொடி யானை மார்புறத் தழுவி
செங்கரும் பேநல்ல சீனிச்
சர்க்கரையே
பண்கிளி யேருசிப் பாகித பூணங்கே
வங்கணமே யெம்மில் வாலிபப் பெண்ணே
இங்கித மேமணி யேபரி மளமே
எங்குலக் கொழுந்தேநான் எப்படி
யழைப்பேன்

எங்கள்சீ ராளனை எப்படி யழைப்பேன்

மெல்லியே எனக்கு விபரம தாகச்

சொல்லடி வகையெனத் தோகைசொல் வாளே!

## நாடகத் தரு

39. குல்லா நிலையங்கி நிசாரு

குலாவுதகட்டி முண்டாசு கப்பாய

சல்லாவு மிடைக்கிடை பொன்மணிதான்

கோத்த ருத்திராக்ஷத் தாவடமும்

நல்லா பரணம்போந்த கோலமிக்க

நாணயப்பொன் எழுத்தாணிஇவை

எல்லாங் கொண்டுன் மாமன்

மதுரையிலே

இருந்தே வந்தார்

இப்பொழுது என்று

சொல்லியழைத் தோடிவரும் ஓரான

சீராளக் கண்மணியே

வென்றிகூர் தம்பிரானுக் கழுது

விரைவிற் சமைத்துப் படைக்கவேணும்

நின்றுநின்று கொண்டு எண்ணவே வேண்டாம்

நெஞ்சொரு மித்து நடவுமென்ன

நன்றுநன்றென வேதன் குமாரனை

நாடிய ழைக்க

நடந்தனனே!

## வசனம்

“சிறுத்தொண்டன் பிள்ளையாருக்குச் சொன்ன பிராத்தனையைச் செலுத்தி வைத்துத் தனயனை யழைக்கப்போகிற சமயத்திலே பள்ளிக் கூடத்தில் படிக்கின்ற சீராளன் “அய்யா! அடியேனுக்குச் செத்தே நித்திரை வருவதென்ன, ‘நல்லதப்பா நித்திரை பண்’ ணென்று வாத்தியார் சொல்லப் படுத்துக்கொண்டு தூங்கச்சே அலறித் திடுக்கிட் டெழுந்திருந்து சரீரமாதியந்தம் நடுக்கமெடுத்து, பயந்து, அங்கேது சொல்வான்,”

(24)

## திரிபுடை

40. அய்யரே குருநாதரே கிருபை
யாளரே எழுத்தாணி சுழற்றிய
கையரே அடியேனிப் போதொரு –
கனவுகண்டேன்

அழைத்துப் போயென்னைத் தூங்கப்படுத்திப்பின்
அன்னைதந்தை இரண்டுபேருமென்
கழுத்தை யறுத்தெந்தன் தலையை அரிந்திடக்
– கனவுகண்டேன்

தயவில்லாமல் என்னங்க மெங்கினும்
தறித்துச் சுவைக்கறி
யாக்கவேயிந்தக்
கயிலை யாளிக்குச் சமைத்துப்
படைத்திடக் – கனவுகண்டேன்!

## வசனம்

"இப்படிக்கொத்த கனவுகண்டேன் சுவாமி! இது நல்லதோ பொல்லாதோ சொல்லுமென்று சீராளன் கேட்க, அதற்கு வாத்தியார், 'அதிலொன்றுமில்லை; பேய்க்கனவு

கண்டாய், பயப்படாதே' என்று நெற்றிக்குத் திருவெண்ணீறிட, 'தம்பி சிவஞான பொத்தகமென்னும் திருமுறையை எடுத்துப்படி, பொல்லாங்கெல்லாம் புறமே போமென்ன, 'நல்லது புத்தி'யென்று அப்படி எடுத்துப் படித்துக்கொண்டிருந்தனன்.''

(25)

## அடதாளம்

41. தனது தனயனை யழைத்துச்
சிறுத்தொண்டன்
மனது மகிழ்வாய் மிகுபல
தனயன் படித்திடும் வாணி
நாடக சாலை சேர்ந்தான்

பெற்ற மைந்தனை யழைக்க வேதியன்
பிரிய முடனே சிறுவர்கள்

சத்த மோங்கிய வாணி
நாடக சாலை சேர்ந்தான்

துங்க மறையவ ரரசர்
வணிகர்கள்
... முதல்வோர்
புதல்வர்கள்
தங்கி ஓதிய வாணி
நாடக சாலை சேர்ந்தான்!

## வசனம்

"வாணி நாடகசாலை முன்போய் நின்றுகொண்டு சிறுத்தொண்டன் சீராளனை ஏதென்று சொல்லியழைப்பான்",

(26)

## ஏகதாளம்

42. நிதியா பரணங்கள் புதிதாகக்
கொண்டுதென்
மதுரையிலிருந் துங்கள் மாமா வந்தார்!

அங்கி நிசாரு முண்டாசு
கபாய்கொண்டு
மங்கள மாயுங்கள் மாமா வந்தார்!

பொன்னெழுத் தாணிசெம் பொன்பொந்தை
கோல்கொண்டு
மன்னவனே உங்கள் மாமா வந்தார்!

உசிதரகச் சித்திரங்கள் உனக்கென்று
தான்கொண்டு

மதுரையிலிருந் துங்கள் மாமா வந்தார்!

சீருடனு மாதா சாரியர்க்

குரைசெய்து

வாருமய்யா உங்கள் மாமா வந்தார்!

## வசனம்

"அகோ! வாத்தியாரே! மதுரையிலிருந்து இன்றைக்கு நல்லம்மான் வந்திருக்கிறான், அனுப்பி வையுமென்ன, 'நல்லது சீக்கிரம் போய்வாரும் பிள்ளாயெ'ன்ன எழுந்திருந்து வித்தியா குருவுக்கு நமஸ்காரம் பண்ணி, அடியேன் போய் வருகிறேன் என்று இப்புறமே வந்து நின்ற சீராளனைச் சிறுத்தொண்டன் எடுத்துக் தோள்மீது வைத்துக்கொண்டு வீதியிலே வருமளவில், அந்தச் செங்காட்டிலுள்ள சகல ஜனங்களும் இந்த விசேஷங் கேட்டு, அவரவர் ஏதென்று சொல்லி அங்கலாய்த்துக் கொள்ளுவார்கள்," (27)

## சம்பை

43. இவனுக்கென்ன கேடுவந்தது

இவனுக்கென்ன ஊழிவந்தது

இவனுக்கென்ன காலம்வந்தது

என்பார்கள் சிலபேர்

தனயன்தனை யறுத்துக்கறி சமைப்பனோ

இவனுக்கென்ன

நினைவுகெட்டு தோவென்று நிகழுவார் சிலபேர்

அமுதுபிச்சை வாங்கியுண்ணு மாண்டியிந்தத்

தனயனுக்கு

இமனாக வந்தாரென் றியம்புவார் சிலபேர்

புயத்திலே பூணூல் பூண்டசிறுத்

தொண்டனுக்கு

பயித்தியம் பிடித்ததென்று பகருவார் சிலபேர்

தீதென்று சொல்லப் போகாதுநன்று அரிகரி

ஏதுகா ரணமோ வென்றோதுவார்

சிலபேர்

பழிகாரன் இவன்முகத்தைப் பார்க்கலா

காதென்று

மொழிசெய்து கபாடங்கள் மூடுவார் சிலபேர்

செய்யசிறு பாலகன் சீர்வடிவைக் கண்டு

அய்யோவென் றுருகி யழுவார்கள் சிலபேர்

குலமிந்த தனையனுக் கிடையூறு

வந்ததென்ன

இவன்தலையி லெழுத்தோவென்று சாற்றுவார்

சிலபேர்!

## வசனம்

"இப்படி யந்தத் தலத்திலுள்ளபேர் யாவரும் நலமும் புலமும் சொல்லி யங்கலாய்த்துக் கொண்டிருக்கச்

சிறுத்தொண்டன் தோள்மீது வைத்தபடியே வீதியில் நடந்து வளவுக்குப் போய், என்னடீ நங்காய்! இதோ தம்பியை யழைத்துக்கொண்டு வந்தேனென்ன வெங்காட்டு நங்கை ஓடிவந்து மைந்தனை எடுத்து மார்போடணைத்து முத்தமிட்டுக்கொண்டு சற்றே யுலாவி, பின்னேது சொல்வான்."

(28)

## திபதை

44. மேதகு பொறுப்படை வெண்காட்டு நங்கை
தீதரு மருமந்த சீரா ளனுக்கு
தலைக்கெண்ணெய்க் காப்பிட்டுத் தடுக்குட னீவி
நிலைக்கெங்கு மஞ்சளை நிலம்பெறத் திமிறிக்
கலங்கி வெள்ளி முக்காலின்மே லிருத்தி
விளங்கிய சீயக்காய் வெந்நீ ரினாலே

அரப்பொடி ஸ்நானம் அடைவுடன் செய்வித்து
பிரபை மெய்யெல்லாம் தூளினால் துடைத்து
மருவிய மலர்கள் வாழ்முக நுதலில்
திரிபுண் டரிகமாகத் திருநீறு சாற்றி
மகிழ்வுடன் தனயனை மடிமிசை வைத்து
மொக்களித மாகிய முலையது
கொடுத்துப்
போதவே யுண்டபின் பொங்கமா யெடுத்து
சோதிசோர் நவமணித் தொட்டில்வாய்
வளர்த்தி
பூங்காத தாலதட்டிப் புனைகலன் வாங்கிப்
பாங்குடன் தூங்கப் படுத்துவள் தானே!

# சிந்து

45. அய்யா செம்பவளச் செவ்வாயா
ஆளப் பிறந்த மாராயா –
தூங்குந்தூங்கும்!
பொங்க மலர் விருபா
பூணூல் விளங்கிய மார்பா –
தூங்குந்தூங்கும்! ·

ஆய கலையில் நிருடம்
அம்புலியே செங்காடா –
தூங்குந்தூங்கும்!
பேரான கீர்த்திப் பிராகாசா
பேணிய விப்பிர குலேசா –
தூங்குந்தூங்கும்!

தெள்ளமுதக் குணசீலா சீரணியுந்
தண்டைக் காலா –
தூங்குந்தூங்கும்!

செங்கமல நன்னேத்திரா துங்கமான
குறிகோத்திரா –
தூங்குந்தூங்கும்

மந்தர மனைய போர்த்தோளா
மகாநதிக்கீழ் வந்தருளாளா –
தூங்குந்தூங்கும்!

மகாதவத் தால்வந்த செல்வா
மனமது வகையாகிய செல்வா –
தூங்குந்தூங்கும்!

சுந்தர நளினத் தாரா
சிறுத்தொண்டனார் தங்கு மாரா –

தூங்குந்தூங்கும்!

சொல்லிய காயத்திரி மந்திரநல்ல

சீராளா நரேந்திரா –

தூங்குந்தூங்கும்!

## வசனம்

"வெண்காட்டு நங்கை யிவ்விதமாய்ச் சொல்லித் தூங்கப் படுத்தல் கண்டு, சீராளன் ஈதேது ஒரு நாளுமில்லை இன்றைக்கு நவமாயிருக்கிறது. ஆனால் நாம் கனாக்கண்ட படிக்கு முடியுதோ நல்லது. என்ன வந்தாலும் படவேணும். பிரமலிகிதம் தப்பாது; இனி நம்மாலே ஆகிறதொன்றுமில்லை சிவசிவா என்று சிந்தித்து மனத்திடம் பண்ணிக்கொண்டு அங்ஙனே மெய்மறந்து சொடுக்கை விட்டு நித்திரை பண்ணுதல் கண்டு ட ,ாதாவுடனே ஏதென்று சொல்லுவாள்,"

(29)

## சிந்து

46. தூங்குறான் சீராளன்பாருந் தொண்டரே யிதோ

தொங்கவே முலைப்பாலுண்டு பாங்குடன்

படுத்துக்கொண்டு

– தூ

பொற்கடலிலே யெந்நாளும் பாம்பணைமேல்

பள்ளிகொண்ட

கார்க்கடல் மேனியன்போல்க் கண்மூடியே

– தூ

மேவிய கடைவாயினில் வெண்புனல்

சேர்ந்தொழுக

வேர்வையெனும் முத்தரும்ப மெய்மறந்துதான்

– தூ

சற்றுமெண் ணாமலெழுந்து பாத்திர

முருவவாங்கி

மெள்ளென நடந்துவாரும் வேளைபோகுது

– தூ

## சீராளன் கழுத்தை அறுத்தான் சிறுத்தொண்டன்!

### திபதை

47. எனச்சிறுத் தொண்டனு மெழுந்திருந் தரனை

நினைத்துள மொருமித்து நீண்ட பத்திரத்தை

உருவியே கைப்பிடித் தொருநொடிப்

பொழுதில்

அருளிய மைந்தன்பா லடைந்தந்த நங்கை

சுதனிட குடுமியைத் தூக்கிப் பிடித்து
அதிசீக் சிரமதனில் அறுத்தனன் கழுத்தை

தலைதனை யெடுத்து வாசலி லெறிந்தே
பின்னலங் கியஅவயவம் யாவுங்கை வாளால்

வகிர்ந்தரிந் தேயந்த மால்விடை யண்ணல்
பகர்ந்தசொற் படியே பதார்த்தஞ்செய்
தமைத்து

கச்சித மாகவே யொள்ளிய அமுதும்
பச்சடி யுடன்பின்னும் பலகறி சமைத்து

மெல்லியல் கணவரை விரும்பியே பார்த்துச்
சல்லாப நண்பரே சமையலாச் சிப்போ

பண்டாரந் தன்னைநீர் பாங்குட னழைத்துக்
கொண்டோடி வாரும்போம் கொப்பென வென்ன

எழுந்தனன் கடவுள்பால் ஏகினன் காலில்
விழுந்தனம் அமுதாச்சு விமலரே வாரும்

சித்தமில் லாதநந் தேவரீ ரவர்கள்
சத்தியப் படிக்குச் சமையலாச் சிப்போ

அளப்பரிதாங் கிருபை யாளரே பசியா
யிளைப்புட னிருக்கிறீர் எழுந்திரு மையா

என்னவே தம்பிரா னிசைந்தெழுந் திருக்க
அன்னவர் பல்லகத் தனமிசை யேற்றி

பலர்புடை சூழ்ந்திடப் பலவாத் தியங்கள்
ஒலிசெய மறையவ னுகந்திறை யவனை

முன்பாகக் கண்டவர் அன்பாய்க்கை கூப்ப
அன்பாயிவன் வீட்டுக் கழைத்துப்
போயினனே!

(பத்திரம்–வாள்)

## வசனம்

"தம்பிரானை அழைத்துவந்துவிட்டு வாசல் முன்பாக நின்றுகொண்டு, ஆரடி! சுவாமியாரவர்கள் எழுந்தருளி வந்திருக்கிறார், திருமஞ்சனங் கொண்டுவாடி! என்று சிறுத்தொண்டன் கேட்க, வெண்காட்டு நங்கை ஏது செய்தனள்",

(30)

## சம்பை

48. திக்கென வெழுந்திருந்து பொற்கலசந்
தன்னிலே
தக்கபுனல் கொண்டு வாசலிலே
வந்துநின்றாள்
புருஷனுடன் தானுமாய் வருமிறைவர்
பூவடியை
வரிசையாய்ப் பூசைசெய்து மலர்தூவி வணங்கி
அழைத்துப்போய் நடுவீட்டில் ஆசனந்
தனிலிருத்தித்
தலைத்த தலைவாழை இலைதான்
போட்டுப்பின்னர்
நீர்தெளித்துத் தூயமுது நிறையவே சொரிந்து
பருப்புகறிகள் படைத்துப் பண்டாரத்துக்குக்
கறிக்கு

நிலைப்பெயர்க ளிதுவெனநிகழ்த்திப் படைக்கு

மளவில்

தலைக்கறி யேதோவென்று தம்பிரான்

கேட்டார்!

## திரிபுடை

49\. கேட்டபோ திருவருமனது

கிலேசமெய்தி யுளந்தளர்ந்து

வீட்டு வாசலில் எறிந்த தலைதனை

மேவிப் பார்த்தார்

எறிந்த தலைதனைக் காண்கிலோமினி

என்ன செய்வோம் தலையைக்

கறிபண்ண மறந்தனம் சிவனே

என்றுளந் தடுமாறி நின்று

ஒருவர்க் கொருவர் தனித்துப்பய மெய்தி
ஓடிப் பார்த்திடில்
பண்டுதான்செய

தெருவில் அந்தண நங்கை
தானந்தச் சிரசை யெடுத்தே

உருசியாய்க் கறியாக்கி னேனென்று
பறிவுடன் கொண்டு
கொடுக்கவாங்கிய

இருவருங் களிப்பாகக் கறியையும்
இலைக்குப் படைத்தார்

புத்துருக்கு நெய்த்தெளிவு கொண்டுவந்து
போதவே மொழிந்தடி
பணிந்தெழுந்

தத்தனென் பசிதீர வேயினி

அமுது கொள்ளும்!

## வசனம்

"என்று சிறுத்தொண்டனும் வெண்காட்டு நங்கையும் உபசரணை சொல்லத் தம்பிரான் ஏது சொல்வார்"

(31)

## சம்பை

50. அருந்தவே நயந்துநாம் அறைந்தபடி

சமைத்தமுது

விரும்பிப் படைத்தனை பிள்ளாய்

வெகுநேர்த்தியாச்சு

ஆனாலு மின்னமொன் றுண்டதனைக்

கேள்செயவறுமை

யானோர்கள் மனைக்குப்போய் அமுதுகொள்வ

தில்லைநாம்

எந்தெந்தக் காலம்வந் தெய்தினா லுஞ்சிறிய

மைந்தரில் லாரமுது வழங்கவுண்ப

தில்லைநாம்

உள்ள மறந்தங்க ளசந்துறங்கிய

கனாவிலும்

பிள்ளையில்லா வீட்டிலன்னம் படித்துண்ப

தில்லைநாம்

நினைத்தபடி யெமக்கமைத்த நேயனே தயவுள்ள

உனக்கினிய சந்ததியுண் டோவென்று கேட்டார்!

## வசனம்

"உனக்குச் சந்ததி யுண்டோவென்று தம்பிரான் கேட்க, சிறுத்தொண்டன் ஏது சொல்வான்"

(32)

## திபதை

51\. தேவரீ ரனுக்கிரகம் செய்யவே யடியேன்
ஆவலா யளித்ததோர் அருமைக் குமாரன்
அவன்பெயர் சீராள னஞ்செனும் வயதில்
அவன்தனைக் கலைகள் யாவும்வந்
தோதவைத்தோம்
பள்ளிக் கூடத்தில் படித்துக்கொண்
டேநம்
பிள்ளை யிருக்குதிப் பேச்சுப் பொய்யல்ல
அழைத்தாலு மச்சேயை யன்புடன யாரும்
வழுத்திய வாத்தியார் மனமிசைந் தனுப்பார்
கண்டவா சகஞ்சட்டம் கசடற ஒப்பித்து
இணக்கமாய் வாசிக்கு மிளஞ்சிறு பாலர்
சாப்பிட வரும்போது தனயனுங் கூட
மாப்பகல் சோறுண்ண வளவுக்கு வருவான்

அதன்பரி யந்தமும் அவனிங்கே வாரான்
இதழ்பெற நீரிப்போ இனளப்பாரு மையா!
அடியேன் இந்நேர மாகார மின்றிப்
பட்டினி யிருக்கின்றீர் பசியாறு மையா!
எனவிப்ர குலவள்ளல் இயம்பவே மகிமை
நனசங்க மப்பிரபு நவிலுவார் தாமே!

## சம்பை

52. என்னதான் சொன்னாலும் ஏதுநீர்
சொன்னாலும்
சின்னஞ்சிறு பாலகனை வரவழைக்க வேணும்
பரிந்துநம் முடையசம பந்திதனி
லிருந்தன்னம்
அருந்திநின் பிள்ளைதனை யழைத்து வரவேணும்

அவனியோர் புகழவாத்தி யார்தம்மை

வேண்டிக்கொண்

டவசியம் பாலகனை யழைத்து வரவேணும்

செழித்தமறை யந்தணா சீராளன் தன்னைநீ

அழைத்துவந் தாலொழிய அமுதுகொள்வ

தில்லைகாண்

படித்ததமிழ் வல்லசெய்வார் விட்டால்

பரிச்சிதம்

படைத்தவன்னம் தன்னையாம் பகருவது

மில்லைகாண்!

## வசனம்

"தம்பிரான் சீராளன் எப்போதும் போலே பள்ளிக்கூடத்திலே படித்துக்கொண்டிருக்க அனுக்கிரகம் பண்ணி வாரும் பிள்ளாய் சிறுத்தொண்டா! உன் புத்திரன் வந்தாலொழிய நாம் அமுது கொள்ளுவதில்லை. அது கெடடி;

இப்போது சதியும் பதியு மிருவரும் போயழையுங்கள்; நீங்களழைத்த சத்தங் கேட்டவுடனே உங்கள் மைந்தன் ஓடிவருவானென்று சொல்லக் கேட்டனர்"

(33)

## திபதை

53. இனிஎன்ன செய்குவோ மென்னசொன் னாலும்
மனமகிழ் புதல்வன் வந்தா லொழிய
படைத்திருக்கு மன்னத்தைப் பருகிலோ மென்று
முடக்கடி வார்த்தைகள் மொழிகின்றா ரறுத்த
சேயதனை யெப்படிச் சென்றுநா
மழைப்போம் ?

போதவே நாம்வதை புரிந்த சந்ததியை
ஏதென்று சொல்லி எழுந்துபோ
யழைப்போம் ?

காதலா யழைத்தாலும் கனத்த

பாண்டுவத்தில்

கறியாக வந்த காளையும் வருமோ?

அருமந்த தனையனும் எழுந்திங்கே வருமோ?

ஈதென்ன பரியாச மீதென்ன பேச்சு

ஈதென்ன காரண மீதென்ன கூத்து

சிவசிவா வெனத்தங்கள் சிந்தையி லெண்ணி

கவலைகொண் டிருவரும் கதிர்மதி போலே

வீட்டை விட்டுமணி வீதியில் வந்து

வாட்டமில்லா மைந்தர் வாசிக்குஞ் சாலை

தெருவாசல் முன்பாய்ப்போய்ச் சீருடன்

நின்றே

அருமையாய்ச் செல்வனை யழைக்கலுற் றனரே

## குள்ளடித் தரு

54. நிதியேநற் பதியேசுப நிலையேசிறு மலையே

மதியேஎங்கள் சீராளக்கண் மணியேஓடி வாரும்

சுதனேமலர் முகனேநல்ல துரையேசெஞ்

சர்க்கரையே

மகனேயெங்கள்சீராளக்கண் மணியேஓடி வாரும்

காழ்வாளி நிலவியுண்ட மென்கனியே

ஒருபெரிய

வாழ்வேயெங்கள் சீராளக்கண் மணியேஓடி

வாரும்

அருந்தென்ன மொழிபேசிய அமுதேதுயர் தீர்த்த

மருந்தேயெங்கள் சீராளக்கண் மணியேஓடி

வாரும்

நிலமேயுயர் குலமேயுயர் நவமேயருந் தவமே

மலரேயெங்கள் சீராளக்கண் மணியேஓடி வாரும்

அணியேசெம் பொற்பணியேதிரு வருளேயரும்

பொருளே

மணியேயெங்கள் சீராளக்கண் மணியேஓடி

வாரும்

திருச்சங்கம ருன்மைத்தம்மி டஞ்சேர்த்தேயமு

துண்ண

வரைச்சொல்லினர் சீராளக்கண் மணியேஓடி வாரும்

பொன்னேகுலக் கொழுந்தேமிகு புகழேமருத் துவர்கள்

மன்னேயெங்கள் சீராளக்கண் மணியேஓடி வாரும்

பாலேகனி ரசமேபிள்ளைப் பயிரேஎம துயிரே

பாலேயெங்கள் சீராளக்கண் மணியேஓடி வாரும்!

## வெண்பா

55. என்றழைக்கும் வார்த்தை யிருசெவியிற்

கேட்டெழுந்து

வென்றியா சான்கை விடைபெற்று –

நன்றுதுகிர்

வாயின்னெப் பொழுதும்போல் வாடாமற் றான்வருவ
தாயின்ன சீராள னறிந்து

## திபதை

56. காலில்வெள்ளித் தண்டை கலகலென் றசையச்
சாலவே யொலிசெயுஞ் சதங்கையுந் தொனிப்ப
அரையினிற் தோவத்தி யலங்காரஞ் செய்ய
அரையினிற் கனகநாண் அவிரொளி வீச
சுடரொளி மோதிரத் துகைமிகப் பிறங்க
கடகங்கள் கையினிற் காந்தியாய் மின்ன
அபரஞ்சி தாயத்து அழகாகத் ததும்பச்
சுபமான வெண்முன்னூல் தோளினில்
திகழப்
புலியுயிர் சரப்பளி பொன்னின்ருத்தி
ராட்சம்

இலங்கிய மார்பினிலி ணங்கியே விளங்கக்
காதின் றம்பக்க டுக்கன்செறிந் தாட
மேதகு நெற்றியின் மேலணி விபூதி
தருக்கிய கீறுசந்தன கெந்தாட்சதை பொட்டு
அருத்திய சுமங்கள மாயெழிற் குலவத்
தென்கிளர் புனலிலெனைத் தூத்திமு டித்த
பின்குடுமி யின்மயிர் பின்னாகத் தொங்க
வாசக மெழுத்தாணி வலக்கையிற்பிடித்து
நேசமாய்க் கைகட்டி நெஞ்சம் மகிழ்ந்து
கல்விசீ ராளனால் கருணைச்சீ ராளனே
செல்வச்சீ ராளன்நேர் தேங்குசீ ராளன்
சூதாய்த் தனையறுத்துச் சுவைக்கறி சமைத்த
மாதா பிதாமின்னே வந்துநின் றனனே!

## வசனம்

"வந்து நின்ற சீராளனைக் கண்டு சிறுத் தொண்டனும் வெண்காட்டு நங்கையும் கிடுகிடென்ன நடுங்கி மெத்தப் பயந்து ஈதேது நாம் அறுத்துக் கறியாக்கினபிள்ளை எப்போதும்போல் எழுந்திருந்து வந்தது, இதுவும் காரணமாயிருக்கிதென்று ஆச்சரியப்பட்டு, ஆனால் வந்தவர் பரமேசுவரனாமென்று நிகண்டு பண்ணிக்கொண்டு காணாது கண்டவர் பூணாது பூண்டவர் போலே களிப்பெய்தி, பிள்ளையைக் கட்டியணைத்து எடுத்து இருக்கிக் கொண்டு சீக்கிரமாய் வளவுக்குப் போய்ப் பார்க்கு மளவில் தம்பிரான் மாய்கையாய் மறைந்து போயினர்!

(34)

## ஏகதாளம்

57. மறைந்திட வேயிவர் மதலையைக் கீழ்விடுத்
திறந்தவர் போல மறந்துமெய் சோர்வார்
விழுவர் கடகடென மேதினிமேல் புரண்டு

எழுவர் பரிதவிப்பர் ஏங்குமவர் துடிப்பார்!
முட்டிக்கொள்வார் கண்ணை மூடிக்கொள்வார்
தம்மைத்
திட்டிக்கொள்வார் மனந்திடுக்கிட்டுத் திகைப்பார்
ஓடுவார் பின்வந்த இறையவனைத்
தேடுவார் மறுகுவர் வாடுவர் பதைப்பர்
அறிந்திவன் வந்தெமை ஆண்டுகொள்
ளாமல்நீர்
மறைந்திட லேதுபெம் மானேஎன்பார்!

## வசனம்

"பின்னையு மெவ்விதமாய்த் துயரஞ் செய்வார்",

(35)

## திரிபுடை

58. மண்ணிலே துகளெழும்ப வேகுதித்
தண்ணலேவுமைப்
பாகரேஎன்று
கண்ணிலே புனல்சொரிய வேமெத்த
கதறி யழுவார்!

அய்யர்தாம் சிவனென்று நாமறியாமற்
போயினோம்
சொல்லிப் பலனென்ன ?
கையை முகத்தில்வைத் தையோவெனக்
கதறிய யழுவார்!

வண்ண மாலிகை பெரிய மாலிகை
மணத்த மாலிகையான்
செய்திலங்

கொன்ன மாலிகையான் புனைந்த கடவுளே
கூறி யழுவார்!

அருள்செய் யாமலே மறைந்து போகுதல்
அடுக்குமோதயை புரியுமெனமறை
பிரமாண மாயர்க் கரிதாய்த் தேவைக்
கூறி யழுவார்!
நாயகா அடியேங்க ளாற்றிய
நாதங் கேட்கிலையோ
செவிக்கென
வாயிலடித்துக் கொண்டானனத் தியானித்து
வருந்தி யழுவார்!

## வசனம்

"அழுதபின் அந்தண னொருவனுமென்சொல்லி நொந்துகொள்வான்," (36)

## சிந்து

59. வந்தவர் மறைந்து போனதென்ன
குற்றமேவெள்ளை
நந்தி வாகன ரூடருக்கேது
சித்தமோ ?

– வந்த

துலையாப் பிறவியென்றுந் துன்பமான
தேயென்றும்
நலியாப் பதவிதந்து நம்மை யாளவோ ?

– வந்த

ஆவலாயெனை யோர்பொரு ளாகநாடி யேபுகழ்
மேவுமெந்தன் ஊரிலெந்தன் வீடுதேடியே

– வந்த

வெள்ளிமா மலையைவிட்டு வேடமாறி

யேயெந்தன்

பிள்ளைதனை யிட்டந்தப் பேரன்பு மீறியே

– வந்த

தான்மகிழ்ந்து நம்மையாளத் தயவு

கொண்டுவெகு

மேன்மையாய்ச் சங்கவேடங் கொண்டு

/ – வந்த

## வசனம்

“என்றுதான் சொல்லிக் கண்ணீர் ததும்ப வேறுபாடின்றி வாழுஞ் சிறுத்தொண்ட பத்தன் திரும்பியும்

சிவனை விரும்பி நினைந்து போற்றி வெதுப்பங்கொண்
டேதுசொல்வான் ?"

(37)

## சிந்து

60. மனைக்கு வந்திருந் தன்ன மிடச்சொல்லி
பின்னங்ஙனே மாயமாய் மறைந்தது
யாதோ ?
எனைக்காக்குந் தேவியினை நேசரே
சுவேதகிரி யீசரே நீரிப்
போதென்

மனைசம்புவே யாட்சியே இன்பமே
மோட்சமே தாணுவே
வெனுமகவே யும்பர்கோவே ஏழைபங்காளரே
கருணை நதியே தெய்வமேநீர்

— மனை

ஏறவொண்ணாத் தருவி லேறவிடுத்

தேணிதன்னை

இழிய வாங்குதல் நீதியோ ?

கூறுமிந்த நாயினேன் கடைத்தேறவே மறுமை

கொடுக்கவே மனத்தி லெண்ணி

— மனை

நங்கடவுளே யென்னைமோசம் போக்கிய கூத்து

நன்றாச்சு நன்றாச்சு நீர்

எங்கு போனீர் சுவாமி ? எங்குபோய்

ஒளித்துக்கொண் டிருக்கிறீர்

வாருமிங்கே !

— மனை

61. பரனே யுமக்குப் பராக்கோ வென்பான்
அரனே திருவிளை யாட்டோ வென்பான்

நற்கதி வேண்டிலன் நானினி யென்பன்
பரகதி யுதவப் படாதோ வென்பன்

ஆதர வெந்தனுக் காரினி யென்பன்
ஏது செய்வேன் தயவில்லையோ
வென்பன்

பாவியில் நானும் பாவிகா ணென்பன்
மேவிய சிவனை விடல்சுக மென்பன்!

## வசனம்

"இந்த விதமாய், சிறுத்தொண்டன் சிவனை நொந்துகொண்டு துய ரப்படுதலை நாரதமகா முனி கண்டு மனமிளகி மனோவேகமாகக் கொண்டு கைலாயத்துக்குப் போய், பரமேசுவரனை வணங்கி, கைகட்டி நின்றுகொண்டு ஏது சொல்வார் ?"

(58)

## திபதை

62. சங்கரா சங்கரா சச்சிதா னந்தா
பொங்கர வணிந்தவா புராந்தகா புனிதா
வாமதேவா நந்தி வாகனா ரூடா
காமன் மதனைக் காய்ந்தமுகக் கண்ணா
பாதார விந்தா சூலபாணி விநோதா
சதாசிவா நிர்மல தற்பர வமலா
காலகால நாகக் கங்கணா கண்டத்

தால காலா ஜராணி சங்கம்தேர்

தேவ தேவா சர்வசிவ தயாபரா

மூவடிவாய் நின்ற முக்கிய விசாலா

பக்த வத்சலா சே''பட்சமாய்க்

கருத்திருந்த

தத்துவ வா'க்கியா ஜகத்திற்குப் பிதாவே

பஞ்சாட்சர திவ்வியா பார்வதி சமேதா

கஞ்சமான காமிக கயிலாச வாசா

நெடிய சடாமுடி நிட்களா கேண்மின்

அடியவன் கேட்கும் விண்ணப்ப

மொன்றுள்தால்

செங்காட்டில் வாழும் சிறுத்தொண்ட

னென்போன்

மங்காத மோக்ஷ மனைபெற வேண்டி

தேவரீர் தமையவன் தியானித்து யேற்ற

கூவியே வருந்துதல் கூறப் போகாது

வகைபா துமையவன் வருத்தியே வாழ்த்தி
மிகப்பரி தவிக்குதல் விளம்பப் போகாது
உம்மையே குறித்துள முருகியே யவன்தான்
விம்மியே யழுகுதல் வினவப் போகாது
கவலையு மவனிட கரந்தாள் முகந்தான்
நவிலப் போகாதொரு நாழிகைக் குள்ளே
நெஞ்சினில் மகிழவே யங்குநீ

ரவன்பாற்சென்

றஞ்சலென்று பரகதி யளித்திடா விட்டால்
மடிகுதல் நிசமவன் மடிந்திடா முன்னே
கடுகிநீர் போய்வர கதிதனில் சேர்க்க
வேணு மையா அவன் மீதிலே தயவு
பூணு மையாயினிப் போமையா வென்று
சீரணி தாங்கித் தாரணி யோர்க்கு
நாரதர் விபரமாய் நயந்துரைத் தனரே!

## வசனம்

"அம்மொழி கேட்டவுடனே நாதர மகாமுனியே நீ சொன்ன படிக்கு ஆகிறதென்று பரமேசுவரன் சந்திகேசுவரனை யழைத்து, பேரிகை முழக்கிவிக்கச் சொல்லினர்"

(39)

## ஏகதாளம்

63. இறைபுரை சேயநந்தி யிறைஞ்சியவர் வாசலில்
முறைமுறை பேரிகை முழக்கிவித் தனரே
குரைகடல் உடையண்ட கோளமும் தீர்ந்திட
முரசு மடமடென முழக்குவித் தனரே
ஏடவிழ் மலர்வீதி யாவரு மறிந்திட
முருகிய பேரிகை முழக்குவித் தனரே!

## வசனம்

"கயிலை மலையிலே அடிபடும் பேரிகைச் சத்தம் சகல தேவதை களும் கேட்டு வரத்தக்கதாக அவரவர் முஸ்தீபு பண்ணிக் கொள்வார்"

(40)

## சம்பை

64. தந்தி முகக்கடவுன் பெருச்சாளி

வாகனமேறக்

கந்த வேளாகிய கலாப மயிலேற
மானுடைய திருமாதவன் கருடன் மீதேற
வாணி நாயக னோதிமந் தன்னிலேற
சித்தசன் சீதளத் தென்றலந் தேரேற
அத்திமக வான்வெள்ளை யானை மேலேற
விண்ணவர்க ளனைவரும் மேலான முகிலேற
திண்ணமுறும் தவமுனிவர் சிவிகை மிசையேற

மற்றுமுள்ள பெரியோருந் தந்தம்வா கனமேறிச்
சத்திபதி முன்வந்து சலாம்பண்ணி நின்றார்!

(சித்தசன் – மன்மதன்)

## திபதை

65. கங்காள ரிடப வாகன மிசையேறி
சிங்கார மாகிய தேவி பவானி
இடப்புறந் திகழ்ந்தன் னெழில்வாங்
குலவமிக்
குடனேசனகாதிபர் வழுத்த அஷ்ட்ட வசுக்கள்
ருத்திராதிப ரியக்கர் அட்டமா சித்தர்கள்
பூதகணங்கள் நீதியானந்த நிருத்தங்கள் செய்ய
கின்னார் தம்முடன் கிம்புரு ஷர்களுங்
கின்னரி மீட்டிச் சங்கீதங்கள் பாட

| | | | |
|---|---|---|---|
| சீரிய | மேனகை | திலோத்தமை | யென்று |
| நாரியர் | எதிர்நின்று | நாட்டியம் | பண்ண |
| சரசமின் | னார்கள் | வெண்சா | மரம்வீச |
| அரிவைய | ரால | வட்டம் | பரிமாற |
| உச்சிதப் | பிரம்புக்கோல் | ஒண்கரம் | பிடித்தே |
| எச்சரிக்கை | பராக்கென் | னந்தி | கூற |
| ஞானநா | யகவென | நாவினால் | துதித்து |
| வானவர் | சேனைபோல் | மலர்மழை | பொழிய |
| தொந்ததொந்த | மென்னவே | துந்துமி | முழங்க |
| எந்தையை | வேல்போல | யாருந் | தவறாது |
| சூழ்வர்தனி | லுயர்வள்ளி | மால்வரை | நீங்கி |
| வருமள | வினில்உமை | மணவாளன் | வந்தான் |
| அன்புட | னடியவர்க் | கானவன் | வந்தான் |
| வன்புடை | யோர்முன் | வராதவன் | வந்தான் |
| திரிபுர | மெரிசெயத | சேவகன் | வந்தான் |

அரிபிர மாதியர்க் கரியவன் வந்தான்
கரிபரி யாக்கிய நாயகன் வந்தான்
கரியுரி போர்த்தமெய்க் காரணன் வந்தான்
அந்தண னுவந்தனித் தாசையாய் வளர்ந்த
மைந்தனை யறுக்கவே வகைசெய்தோன்
வந்தான்
**பள்ளிக்கூ** டத்திலே படித்துக்கொண்
டிருக்கும்
பிள்ளையைக் கொல்வித்த பிஞ்ஞகன் வந்தான்
மறையவன் பாலனை வாளா லறுப்பித்
திறவாமல் காத்த இறைவன் வந்தான்
தேனார் மொழியிடை சேய்க்கறிக் காகத்
தானாசைப் பட்ட தயாநிதி வந்தான்
ஆயவோர் தனங்கொள் அங்கிருந் தகன்று
மாயமாய் மறைந்தெம் மயேசுரன் வந்தான்

எனத்திருச் சினம்விரு தெடுத்திசைத் தூது
சினத்தொனி கேட்டுச் சிறுத்தொண்டனு
மெள்ளத்
தின்பமுற் றோருடம் பீருடம் பாகி
அன்புடன் கணத்தை அண்ணாந்து பார்த்துக்
கொண்டிருக்கச் சத்தி கொண்கனுந் தோன்ற
கண்டுசாட் டாங்கமாய்க் காலுமேற் பணிய
தழுவியெ டுத்து மார்தன்னோ
டணைத்துப்
பழமறை தனில்வல்ல பாப்பானைக் காமுற்று
உச்சியை மோந்து அண்டையுட்
காரவைத்து
கைச்சிலை மாரன்போல் காமன் மால்போல
வாழ்வீர் விளங்குவீர் வர்த்திப்பீ ரென்றுந்
தாழ்விலாப் பாக்கியந் தான்மிகப் படைப்பீர்

இப்படி யினும்பல யியம்பியே வாழ்த்தி
மெய்ய்புடன் சபாசென மேற்புறந் தட்டிக்
கறைகண்டன் செந்தழற் கண்ணுதல் வள்ளல்
சிறுத்தொண்டர் நாம்வந்து செப்பிய படிநீ
மனந்துணிந்தே பெற்ற மைந்தனை யறுத்து
மனங்களிப் பாய்க்கறி வரிசையாய்ச் சமைத்து
அமுதெமக் களித்தனை அம்மம்மா

உனைப்போல்

விமரிசைக் காரர்பார் மீதினி லில்லை
பத்தியென் றாலுந்தன் பத்தியே பற்றி
சித்தமென் றாலுந்தன் சித்தமே சித்தம்
அன்பென் றாலுன்னிட அன்பேநல் லன்பு
இன்பமென் றாலுன்னிட யின்பமே யின்பம்
தன்மமென் றாலுந்தன் தன்மமே தன்மம்
நன்மையென் றாலுந்தன் நன்மையே நன்மை

நேசமென் றாலுந்தன் நேசமே நேசம்

பூசையென் றாலுந்தன் பூசையே பூசை

கல்வியென் றாலுந்தன் கல்வியே கல்வி

செல்வமென் றாலுந்தன் செல்வமே செல்வம்

வாகையென் றாலுந்தன் வாகையே வாகை

ஈகையென் றாலுந்தன் ஈகையே ஈகை

அருமையென் றாலுந்தன் அருமையே அருமை

பெருமையென் றாலுந்தன் பெருமையே பெருமை

மானமென் றாலுந்தன் மானமே மானம்

ஞானமென் றாலுந்தன் ஞானமே ஞானம்

வார்த்தையென் றாலுந்தன் வார்த்தையே வார்த்தை

கீர்த்தியென் றாலுந்தன் கீர்த்தியே கீர்த்தி

உனக்கிணை யானபே உலகத்தி லுண்டோ ?

உனக்குனக்கே நிகர்உன்னுதே அதிர்ஷ்டம் தம்பி

உன்மீதில் யாந்தயைமிக வைத்தோம் தம்பி

உன்மேல் சந்தோஷ மாச்சுது நமக்கு
இகத்தி லிருக்க இதயமே பரமாம்
அகத்தைக் கைப்படத் தியானமோ உனக்குச்
சொல்லெனவே வந்த சுவாமியார் கேட்க
நல்லவார்த்தைகள் சொன்னீர் நன்றாச்சு பேச்சு
இன்னமு மேனிந்த இகத்தாசை யெமக்கு
மன்னிய பரகதி மறுவலே உறுதி
ஆனாலு மின்னமொன் றடியேன்
விண்ணப்பம்
நானாளு மூரினில் நம்மனை யுடனே
ஈரேழ் மனைக்காரர் எமக்குப் பந்துக்கள்
சீரா யிருக்கிறார் சிவகதி யவர்க்கும்
அளிக்கின்ற பக்குவமா மாயிருந் தால்யான்
களிப்புடன் பின்னே கயிலைக்கு வருவேன்
இல்லாவிட்டால் வார தில்லையா னென்று

சல்லாப வேதியன் சாற்றவே

யிறையோன்

அப்படி யாகுமென் றக்கணம் சுரரைக்

கொப்பனவே அழைத்துப் பிரபை யானர

தங்கொடு வாவென்ற தின்அலங் காரர

தங்கொடு மாதலி ரமணிய மாக

வந்ததெதிர் நிற்கவே மகதேவர் பார்த்து

அந்தணன் மனைவி சேயான மூவரையும்

சந்திரவதனச் சந்தன நங்கை தனையும்

பொந்தியோ டேநீங்கள் இந்தத் தேர்மேலே

ஏறென வேறி இருந்தனர்

தொண்டன்

கூறிய படியவன் குலத்தவர் தமையும்

பல்லக்கி லேற்றிக்கொண் டல்லலை மாற்றி

வல்லியருள் ஒருகோடி மங்களம் பாட

சம்பிரமாய் நாகசரங் கொடி யூத
நம்பிரான் இவர்களை நயந்தழைத்துக்
கொண்டு
யாவரும் தொழுதேத்தத் தேவர்கள் போற்ற
மெய்க்கயி லைக்கி விரைவிற்போ யினரே!

(பொந்தி – சரீரம்)

## வசனம்

"சிறுத்தொண்டன், வெண்காட்டு நங்கையை, சீராளனை சந்தனநங்கையை அவன் பந்துக்களையும் கூட அழைத்துக்கொண்டு கைலாயத்துக்குப் போய்ப் பரமேசுவரன் திருவாசல் கடந்துபோக, பின்னே வரப்பட்ட சிறுத் தொண்டனை வாசல் காக்கும் துவாரபாலகர் பார்த்தேது சொல்வார்,"

(41)

சம்பை

66. ஆரடா ரதத்தின்மேல் ஆரடா வருகிறவன்
ஆரடா நன்றாச்சு தாரடா நீதான்
நரமனுஷன் வெண்கயிலை வரைதனைக்குப்
பொந்தியுடன்
வருவதேதெனத் தடியை மாறிக்கொண் டதட்டில்
நில்லடா நீதூர நில்லடா வாய்திறந்து
சொல்லடா வெனப்பயந்து சொல்லுவான்
மறையோன்
அத்தனார்க் கமுதுசொல்லி உத்தசுவைக்
கறியாகப்
பெற்றதனை யனையறுத்த பெரும்பாவி நான்காண்
எந்தனூர் திருச்செங்கா டெந்தன்பேர்
சிறுத்தொண்டன்
அந்திவண்ணர் பலிகைகொண்டு வந்தன
மிங்கேதான்

இகமீதி லிந்தநடக் கபயமளிக்க வேதோன்றி

மகதேவர் அழைத்துவர வந்தனமிங் கேதான்

என்றுமொழி வாசல்கடந் தேகுமிறை

யோன்கேட்டுச்

சொன்னமறை யோன்பாலிற் துரிலென வந்தார்

## வசனம்

"வந்த பரமேசுவரர் அந்தணனை நோக்கி யேதென்று கூறுவார்,"

(42)

## திரிபுடை

67. என்ன சொல்லினை ஏது

சொல்லினை ?

என்ன மென்று சொன்னாய்

மனந்துணிந்து

உன்னைப்போல் பக்தி யுகந்துசெய்வா

றில்லையோ ?

உனக்குனக்கே நமக்குநிக ரிந்தஉலகில்

இல்லையென்று

சாலவேநீ மனதில் எண்ணிக்கொண்

டிருக்கிறாய்

உனைப்போல வைய கத்தில் இல்லையே

உள்ளம் பயந்துநம் வாசல் பேருடன்

'பிள்ளை யறுத்தவன் பாவிநான்' என்று

பொல்லா வார்த்தைக ளாகவேநீ

புகன்ற தென்ன ?

## வசனம்

"நீ வாயினாலே இந்தச் சொல் சொல்லலாமோ? உனக்கு சொல்லிடையே இடம் இன்னம் அறிவு திடப்படவில்லை. அஞ்ஞானமும் சற்றே யிருக்கிறதென்று தெய்வமயனை யழைப்பிச்சு, வெண்காட்டு நங்கை, சீராளன், சந்தன நங்கை பந்து ஜனங்களுமிருக்க அரமனை ஆஸ்தான மாடமாளிகை மேடை உப்பரிகை அமைத்து, மற்று முண்டானதும் கயிலைப்புரிப் பட்டணத்திலே உண்டுபண்ணி வைக்கச் சொல்லி அவர்களை அந்தந்த ஸ்தானங்களிலே நிறுத்தி யாவர்களுக்கும் இஷ்டான்ன காமியங்களுங் கொடுக்கக் காமதேனுவைக் கட்டளை பண்ணி, சிறுத்தொண்டனை மாத்திரம் கூட அழைத்துக் கொண்டு பரமேசுவரன் திரும்பப் பூலோகத்திலேயிறங்கி, இருவருஞ் சங்கம வேடங்கொண்டு, கழுக்காணி அம்மை யிருக்கப்பட்ட மாயாபுரிக்கு வந்தனர்;"

(43)

## ஏலச் சிந்து

68. மாயாபுரி வீதி தனிலே யார்பார்!
மாயவரரே யாவென்றே விநோ தார்த்தமாக
பாட்டு வாரப் பாடி வந்தாரே
பாட்டுக்கேட் டோடிவந்து பார்த்துச்சர
ணாகதியென்ன
மீட்டியான் சங்கம வேடங்கொண்டு
யோக்கியமாய்
வாட்ட மின்றி வீதி வந்தாரே
வீதிதனி லுள்ளோர்யாரும் வேடிக்கை
பார்க்கவேசிலர்
எதிர்வர கடவுளே எண்ணச் சிலர்சால

அதிமாயமென்ன வந்தாரே வளமையான ராச

வீதி மன்னவர் கண்டங் கீகரிக்க

உளவு கேட்டுமவர் வீதியே

கழுக்காணிதன்

வளவு தேடிக் கொண்டு வந்தாரே!

## வசனம்

"பரமேசுவரனும் சிறுத்தொண்டனும் மாயாபுரி வீதியெல்லாங் கடந்து வேளாளர் வீதியிலிருக்கப்பட்ட கழுக்காணியம்மை வளவுக்குப் போய் வாசலில் நிற்குதல் கண்டு அவள்வந்து வணங்க வாழ்த்தி ஏது சொல்வார்,"

(44)

## சிந்து

69. அன்னமிடுறையோ அம்மே அன்னமிடுறையோ

அம்மே!

அன்னமிடுறையோ எங்களுக் கன்ன

மிடுறையோ

அண்டத்தூர மெல்லாந் திரிந்துவந்தோம்

ரெண்டு

பண்டா டரங்களுமிகப் பசித்து வந்தோம் –

(அ)

என்னம்மே யினியோரிடம் ஏக

மாட்டோம்இது

தன்மம்செயும் வீடெனத் தானம்

கேட்டோம்—

(அ)

இங்கிதத் தருமகுண மேபடைத்த தாயே

எங்களுப் போபசி இளைப்பு மெத்த –

(அ)

## வசனம்

"இவர்கள் இப்படிச் சொல்லி அன்னங்கேட்க, கழுச் ;ாணியம்மை இனிது உத்தரஞ் சொல்வாள்,"

(45)

## சம்பை

70. நல்லது சுவாமிகுணாலயா நல்லது
கிருபாகரா
நல்லது சர்வேசுரா அரைக்ஷணத்திலே
சமையலாகுது
இங்கிருமென்னத் தங்களுடைய நதிக்குப்போய்த்
திரும்பி வந்தோம்
எனநல்ல தெனஇவர்கள் இருவருமே
அந்தநதிப்
புனலாடிப் பூசைபண்ணி பூங்காவில் இருந்தார்!

## வசனம்

"இருவரும் பூங்காவிலிருக்க கழுக்காணியம்மை

ஏது செய்குவாள்"

(46)

## திரிபுடை

71. வீடெல்லாம் சுத்தி பண்ணிக் கோமயம்

வீடெல்லாம் இறைத்தி றைத்துப் பாங்குடன்

வீடெல்லாம் பத்தியாய்ப் பச்செனத்தரை

மெழுகியே

பின்புதிய பாண்டுவத் தோகைகள்

கொடுவந்து

மதுரமாய்க் கறியமுது சமைத்துவைத்து

அங்கொரு

குடங்கொண் டன்போடு நதிக்குப் போனாள்

இலைகள்பால் தயிர்நெய்யுங் கொண்டுவந்

தொலியுலாவக்

கபாடஞ் சாத்தி சங்கியைப் பூட்டித்

தண்ணீர்க்கு நடந்து மங்கிலியும் போனாள்!

(பாண்டுவம் – வெண்மை)

### வசனம்

"அமுது சமைத்துவைத்துத் தண்ணீர்க்குட மெடுத்துக் கொண்டு கழுக்காணியம்மை ஆற்றுக்குப் போன சமயத்திலே பூங்காவனத்திலே யிருக்கின்ற பரமேசுவரன் அங்கே மாடு மேய்த்துக்கொண்டிருக்குங் கழுக்காணியம்மன் மகனைக் கண்டு அழைத்துப் பேச்சுக் கொண்டனர்"

(47)

72. என்னத்தான் நீயுன் பேரூ ரென்ன ?

நின்தந்தை யன்னை பேரூ ரென்ன ?

நீயார் வீட்டுப்பிள்ளை தொழிலென்ன

உங்கட்கு ?

சொல்லடா வென்று மழவிடையோன்

கேட்க

மாடு மேய்க்கின்ற னையனும்

சொல்வான்

பண்டார மேநீர் மெய்யாகக் கேளும்

யான்வெள் ளாளப் பிள்ளை தகப்பன்

பேர்கழுக் குன்றன் தாயார்தன் பேரே

கற்புடை மெத்த கழுக்காணி யம்மை

அவள்பிள் ளையாம் கழுவாமணி யென்பேர்

சவுபாக் கியங்களுந் தான்மிகப் படைத்தே

இருக்கின்ற நாளைக்கிக் குலாவி இருந்தோம்

செருக்குடன் எனைப்பெற்றுச் செல்வமாய் வளர்த்த

தகப்பனும் மறித்தான் தானஞ்சாரூ ராச்சு

தகப்பனு மறித்தபின் சற்றுநா ளளவில்

பாக்கியம் போச்சு கைப்பணங்களும்
போச்சு

யார்க்குமேல் வாட்டமா யிருந்ததும் போச்சு

சகலமும் போச்சு சந்தாபமே லாச்சு

சகலமும் ஞாதியர் தங்கள்பங் காச்சு

கொத்தமாய் வாழ்ந்த குடிநொந்து போச்சு

மெத்தவுந் தரித்திரம் மேலிட்டுப் போச்சு

தெளிதா னரிவாங்கும் கூலிக்கி விட்டார்

வெளியில்வந்து யான்மாடு மேய்க்கலு மாச்சு

என்னென்று சொல்லுவேன் என்னிட பிழைப்பே ?

என்னென்று சொல்லுவேன் என்னிட இருப்பை ?

என்னென்று சொல்லுவேன் என்னிட சுகத்தை

என்னென்று சொல்லுவேன் எனதுதுக் கத்தை

இனிச்சொல்லி ஆவதென்ன என்னிட தாயார்

மனச்சலிப் பில்லாமல் மனைமனை தோறும்

கூலிக்கு நெல்லுதான் குத்தியே யவர்கள்

பாலிக்குங் கூலியைப் பாங்காக வாங்கி

கொண்டுவந் தேநல்ல தண்டுல மெல்லாங்

கண்டசங் கமர்க்கே களிப்புடன் தினமும்

காய்கறிசம் பாதித் தரைக்கணந் தனிலே

பாகமாய்ச் சமைத்தன்னம் பண்புடன்
படைப்பாள்

தவிடுநொய் தன்னைக்கூழ் சமைத்தெனக் கிட்டு

தவறாம லென்னுடன் தானும்சாப் பிடுவாள்

வரும்ஞான்று கூழின்றி வருத்தமிகு ஞான்றும்

நெல்லுசோ றுண்டுநான் நீயெனத் தானுண்ட

பின்பல்லோ தர்மம் செய்குவதுதான்
உண்ணாதே

செயல் தர்மமோ சொல்லு இப்படியாக

இருக்கின்ற நாளைக்கு இருக்கின்ற ததிர்ஷ்டம்

என்னவே கேட்டவர்க் கிதுவிது வென்றே

மன்னிய கழுவா மணிபுகன் றனனே!

## வசனம்

"கழுக்காணி மகன் கழுவாமணி இவ்விதம் சொல்லக் கேட்டுப் பரமேசுவரன் ஏதென்று சொல்லுவார்,"

(48)

## ஏகதாளம்

73\. விபர மதாய்நீ விளம்பிய
வார்த்தைகள்
கடலில் மெய்காணக் கழுவா மணியே
பழமைய தாகிய கிழவனைப் போலநீ
கழறிய மொழிநிசங் கழுவா மணியே!
சின்னவய தாகினுஞ் சிறுபிள்ளை யாகினுங்
கனபுத்தி மானாங் கழுவா மணியே!

74. கூறுமுன் தன்னைத்தினங் கொண்டுவருங்
கூலியையுங்
காறுகொண்டு நீமாடு மேய்க்குங்
படலியையும்
வாங்கிவந்து வரிசை வரிசையாய்ச்
சோறாக்கி
ஓங்குசங் கமர்களுக்குத் தேங்கவே
படைப்பேன்
எனவுனக்குப் பொய்சொல்லித் தனியிருந்து
வெண்சோற்றை
தினமுமவ ளேயுண்பள் உன்னைவஞ்
சனைபண்ணி

உந்தனுக்குத் தவிட்டுக் கூழுதவியவள்
சம்பிரமாய்
சந்ததமுங் கறிசோறு தானுண்பாள் பாவி

அஞ்சிக்கை யில்லாமல் பண்டாரங்களைச்
சாக்கிட்டு
வஞ்சித்து உண்டால் சோறுவாயில்
தான்போமோ ?

தனதுகுடிப் பெயர்சொல்லச் செனைமாஞ்
செய்வஞ்
சனைசெய்து தானுண்பாள் சண்டாளி
யல்லவோ ?

## வசனம்

"கழுவாமணியே! இப்படிக் கொத்தவளைத் தாயென நம்பிச் சொல்ல யிருக்குதா ? இப்பவும் உங்கள் தாயார் நன்றாய் வாய்ப்புக் கொப்பாய் உள்ளே சகலமும் சமைத்து வைத்துத் தண்ணீர் கொண்டு வர ஆற்றுக்குப் போயிருக்கிறாள்; இது சமயமவள் வாரததற்கு முன்பாகத்தானே நீ சீக்கிரமாய்ப் போய் மனந் திருப்தியடையச் சாப்பிட்டு வாரும் பிள்ளாயெனக், கழுவாமணி யேது சொல்வான்,"

(49)

## சிந்து

75. எங்களம்மை யப்படிக் கொத்தவளல்ல

சுவாமி

உங்களுடனே தமியேன் யாது சொல்ல

எங்குமவள் தர்மம்செயக் காதில் கேட்டேன்
நீங்களியம்பிய வார்த்தைக் கெதிர்சொல்ல
மாட்டேன்–
(ஏ)

ஏதவள் மீதிலே சொன்னீர்கள்
யேழையவள்
வாய்திறந்து பெய்யுமென்றால் பெய்யு மேமழை!–
(ஏ)

பெற்றபிள்ளை யன்றியவள் செய்வா ளோசதி?
நித்தமும் எனக்குக்கை பெய்வாளோ
நீங்கள்

எப்படிச் சொன்னால் பேசிடென்ன
நன்மை
இங்கிதென எனக்குப்புத்தி தெரியச் சொன்ன–
(எ)

## வெண்பா

76. என்னவிம லன்சொல்வா னேதுபிள்ளை
யானாலுன்
அன்னைவஞ் சகத்தை யறியாய்நாம் ––
சொன்னபடி
இன்றைக்குத் தான்போய்ப் பார்எல்லாஞ்
தெரியுதெம்முன்
நின்றகழு வாமணியே நீ!

77. போடா வளவுக்குப் போய்நன்றாய்ச்
சாப்பிட்டு
வாடாநீ யிங்கே வருந்தனிலும் --
மாடோடிப்
போகாத வண்ணம் புரக்கின்றோம்
யாங்களெங்கும்
ஏகாத வண்ணம் இருந்து!

## விருத்தம்

78. சிவன்சொல்ல இதேதிப்படி இவன்சொல்வதென்
றெண்ணி
உவந்தின்புடன் கனஞ்செய்வுறு கம்பினைத்
தோள்வைத்து

அவஞ்சேர்    மருவலர்கேசரி  அதுலன்

கழுக்குன்றன்

தவஞ்செய்தருள்  கழுவாமணி  தன்மாளிகை

புக்கான்!

(அதுலன் – இணையற்றவன்)

## வசனம்

"எங்கள் தாயார் வஞ்சனை பண்ணுகிறதில்லை யென்று சொன்னோமே; அவர்கள் சொன்னதே மெய்யாச்சென்று தாலத்தை எடுத்து வைத்துக்கொண்டு சோறு பருப்பு நெய் பொரியல் குழம்பு பச்சடி மற்று முண்டானதும் போதயிட்டுக்கொண்டு பிசைந்து ஆவலாய் உண்ணச்சே ஆற்றுக்குப் போன கழுக்காணியம்மை

தண்ணீர் எடுத்துக்கொண்டுவந்து மனைக்குள்ளே நுழைந்து பிள்ளையைப் பார்த்து, குடத்தை இறக்கி வைத்தங் கேது செய்தனன்,"

(50)

## திபதை

79. கலங்கரி மடந்தையாங் கழுக்காணி யம்மை
கலந்தனில் உண்கின்ற காளையை நோக்கி
இந்தவூ ரடைந்து வந்தென் மனைதேடி
வந்தசங் கமர்க்குநான் வருத்தமாய்ச் சமைத்து
வைத்தசோற்றினை எந்தன் வயிற்றினிற் பிறந்த
புத்திர னென்றுநாய் புழுத்தநாய் வந்து
தண்ணீக்குப் போன சமயங்கண் டிந்த

வண்ணமா ளிகைதனில் வந்தே புகுந்து

சட்டை யில்லாமல் தருக்குடன் இருந்து

சட்டிபா னைகளெல்லாந் தான்திருட்டுப்
பண்ணித்

தின்னுமோ வெனமனஞ் சினத்துக்கண் சிவந்து

பின்னையும் பாம்புபோல் பெருமூச்சு விட்டு

பறக்கடித் திகழ்தனைப் பல்லினால் தூக்கி

நெல்குத்து முலக்கையை நீள்கரத் தெடுத்தே

நீங்கா திருக்குந்தன் ஆங்கார மெல்லாம்

ஓங்கியே அடித்தனள் தன்னுடைய சேயைத்

தாக்கி யடிக்கவே தலைமண்டை பிளந்து

வாய்க்குள்ளே மூளைகள் வந்தெய்து ரத்த

வெள்ளமா யோடவே மெய்துடி துடிப்பப்

பிள்ளையும் நாக்கைப் பிடிங்கிக்
கொண்டேதான்

மடிந்தனன் மடியவே மைந்தனை யெடுத்துப்
படிந்திடும் பாய்தனில் பாங்குடன் சுருட்டி
அட்டத்திற் போட்டுப்பின் அகஞ்சுத்தி பண்ணி
அட்டபா னைகள் சட்டியாவுங் கழித்து
மகிழ்வாய்ப் புதுப்பாண்டு வங்கள்
கொணர்ந்து

தகவே முன்சமைத்த சமையலைப் போலே
விரைவினிற் சமைத்துணவத் தரிவையு
மப்போ

மருவளர் பூங்கா வனந்தனி லடைந்து
மேவிய சங்கமர் பூவடி பணிந்து

நீர்வர விரைவினிற் நிவத்தியங் கொள்ள
எனவழைத் திடஇவர் இருவரும் எழுந்து
மனங்களிப் பாயவள் மனைக்குப்போ
யினரே!

## வசனம்

“மனைவாசல் முன்பாக வந்துநின்ற சங்கமருக்குக் கழுக்காணியம்மன் திருமஞ்சனங் கொண்டுவந்து பாதார்ச்சனை பண்ணி, கிருகமே அழைத்துப் போய் ஆசனத்திருத்தி, இலைபோட்டு, நீர் தெளித்துச் சமையலெல்லாம் படைத்து, தான் வணங்கி, மெல்ல, ‘இளைப்புடனே இருக்கிறீர்கள் நல்லது இனி அமுது செய்யுங்களென, சோதியார் ஏது சொல்வார்,”

(51)

## வெண்பா

80. வெகுசம்பி ரமாச்சு விடுப்புடன் அன்னம்
மிகவே படைத்தனையால் வீடுபுகு
நீயென்
அம்மே மலடகத்துச் சோறுண்
பதில்லையே
இம்மே தினியில்லாம் என்று!

## கலித்துறை

81. வள்ளை யெனும்செவி காரெனும்
கூந்தல் மதிவதன

கிள்ளை மொழிப்பசும் பாவைதூய்மை
கேழ்வ னாந்தூய
வெள்ளை விடைப்பரன் கங்காளன்
ரத்தினமே உனக்குப்
பிள்ளை யுண்டோ எனகழுக்
காணியும் பேசுவளே!

(கங்காளன் – சிவன்)

## சம்பை

82. பிள்ளை யுண்டதொரு பிள்ளையுண்
டந்தப்பிள்ளை
வள்ளலே கூலிக்கு மாடு
மேய்க்குதுகாண்

பாட்டைவிட்டுப் பரப்பைவிட்டுப் பக்கலிலே

யொருநாளு

மாட்டைவிட்டு வீட்டுக்கவன் வரதில்லை காணும்

வந்தாலும் ராத்திரிக்கு வருவன்பசி

கெடநீங்கள்

சிந்தாமல் பிசைந்தமுது செய்யு மென்றனரே!

## ஏகதாளம்

83. நீஎன்ன சொல்லினும் நீசினத்திடினும்

உன்சேயின்றியே

அசனம் செய்குவதில்லை பதிவிரதையே

அருந்ததியே

உண்ணிட சுதனின்றிநீ இட்டசோ

றுண்பதில்லைநாம்

விழுப்பமேதான் பெற்ற மேய்க்குமுன்

காளையை

அழைத்துவந் தாலொழிய ஆகா தென்றார்!

## வசனம்

“உன்பிள்ளை வந்தாலொழிய நாம் துளி அமுது கொள்ளுகிறதில்லை யென்று தம்பிரான் சொல்ல, கழுக்காணியம்மை கோபித்துக்கொண்டங்கேது சொல்வாள்,”

(52)

## திரிபுடை

84. படைத்த சோற்றினை உனது சேயின்றி

பருகிலோ மென்று சொல்வதென் ? —

பிச்சை

எடுத்துண்பார்களுக் கிந்தப் பாண்டித்தியம்

அடுக்கு மோதான் ?

இட்டசோறும் உலர்ந்துபோகுது

ஈதேது பரியாசமோ ? — சும்மா

குட்டன் பசிதீர ஓதனங்

கொள்வ தில்லையோ ?

சதிரதாய்ப் பலமாடு மேய்க்கும்

சந்ததி வந்தா லுகந்துண்பான்

உதவுமதலை வராவிட்டால்

அமுது உண்ணப்படாதோ ?

(குட்டன் – மகன்; ஓதனம் – சோறு)

## வசனம்

"நான் எத்தனையாய் பிரயாசைப்பட்டுச் சமைத்துப் படைத்த சோற்றை, உன் பிள்ளை வந்தாலொழிய நாங்கள் உண்கிறதில்லை என்று ஒரு நிர்ணயமாய்ச் சொல்கிறதென்ன ? ஆனால் ஒரு நாழிகைக்கு முன்னே நானில்லாத வேளையிலே இந்த வீட்டிலே நாய்வந்து புகுந்து சட்டிப்பானையிலே வாயிட்டு, நான் கண்டு, அந்த நாயை

உலக்கைத் தடியாலே தலை மண்டையைப் பிளக்க அடித்து எடுத்தெறிந்து போட்டேன். அப்படி உங்களையும் அடிப்பனோ? இட்டதை உண்கிறீர்களோ இல்லையோ என்று கழுக்காணியம்மை உலக்கையை எடுத்துக் கொண்டு தலைமேலோங்கப் பரமேசுவரன் கலீரென்று நகைத்துச் சந்தோஷப்பட்டுத் தம்முடைய திவ்விய சொரூபத்தைக் காட்டி அருளி என் செய்தனர்,"

(53)

## திபதை

85. தழைக்கின்ற கற்பகத் தருவெனக் கீர்த்தி
கழுக்குன்றன் இன்புற்ற கழுக்காணி யம்மை
தருக்குநம் மடியோர்மேல் சற்பத்தி வைத்த
கருத்துள்ள மாதவக் கழுக்காணி யம்மை
நீயென்ன மேனன்று சேயை அகத்தில்

நாயேன் உலக்கையினால் மண்டை கிழிய

அடித்தவள் போன்ற அம்மாநின் குண்டி

திடக்குண்டி காண்வச்சிரக் குண்டியே யானால்

உன்னுதே வயிராக்கியம் உன்னுதே துணிச்சல்

உன்னுதே துணிகரம் உன்னுதே பத்தி

இனியுண்டோ எனத்துதித்து இரந்து அட்டத்துத்

தனயனை வாவெனத் தற்பரன் கூற

அட்டத் திலிருந்தெழுந் தங்ஙனே கீழே

திட்டெனக் குதித்தனன் சிவசிவா என்றே

குதித்தடி வணங்கிய குணதர மகவைக்

கதித்ததிண் புயத்தினால் கட்டிக்கொண் டருகே

இருக்க வைத்துப்பின் திருங்செங் காட்டூரில்

துரைத்தனம் பண்ணிய தொண்டனை நோக்கி

பிள்ளையை யறுத்த பெரும்பாவி என்று
பொல்லாத வார்த்தை புகன்று
சொல்லினையே

கண்ட னையோ கழுக்காணி
தன்னெஞ்சம்

கண்ட னையோ கழுக்காணி
தன்திறனை

இப்படியும் வாரிசூழ் இருநிலந் தன்னில்
மெய்ப்பத்தி செய்பவர் வேண்டிய பேர்கள்
நான்செய்தாப் போலே நயந்தொரு மித்து
தான்செய்வா ருண்டோவித் தாரணி தனிலே

என்மிகுந் தனயனே நீயென

மறையோனுங்

கொன்றை யலங்காரக் கோககைத்

தாள்வணங்கி

சுவாமியுன் மகிமையைக் கண்டவர்

குணங்கேட்ட

கந்தனில் யானும் கூறிய பேச்சை

மனத்திலே தேவரீர் வைக்கவேண் டாமென்

றினித்தொரு தாழ்வுரைத் தியம்பவே யோடும்

நந்தவ வேளையிற் கழுவா

மணிதனையுங்

கந்தம் புகுந்த கழுக்காணி தனையும்

புரைதீர்ந்த தமது பொந்தியி னுடனே
இருவரும் துவ்விய ரதத்திலேற்றிக்
கொண்டு

அழைத்துப் போயினர் அந்தண னுடனே
அழைத்துப் போய்வெண் கயிலா யத்திலே
ஏத்த திதியில் போடப் பட்ட
அபிஷேக மண்டபத்தில் பலர்தொழ வந்து
பச்சை ரத்தின சிம்மாசனத் திருந்து
தீதறு மனத்துடை சிறுத்தொண்
டனுக்கும்

நன்னுதல் வெண்காட்டு நங்கையென்
பவளுக்கும்

அன்னவ னீன்ற சீரா ளனுக்கும்

இந்தத் தலைக்கறி எனக்குணர்ந் தளித்த

சந்தண நங்கை தனக்கும் வெள்ளாள

கழுக்காணி அம்மைக்கும் கழுவா மணிக்கும்

செழிக்கவே தேங்கவே திருவருள் புரிந்து

அங்கமென் னாளும் அழிந்திடா திருக்க

துங்கமாந் தேவ தத்துவமுங் கொடுத்து

நினைத்த தெல்லாம் வந்துநே ரிட்ட

கருணையு மளித்து வரவழைத்துச் சமூகப்

பாலில் முன்னாகவே வெண்பருப்பத வள்ளல்

கோலமாய்த் தாம்வைத்துக் கொண்டிருந் தனரே!

## வசனம்

"இந்தச் சிறுத்தொண்டன் கதை யக்ஷகானத்தை விரும்பி யெழுதிய பேரும், ஆவலாய் இசையறிந்து படிக்கின்ற பேரும், பத்தியாயிருந்து கேட்கின்ற பேரும், கேட்டு வழங்குகின்ற பேரும் மனைக்குப் பந்து மக்களுக்குச் சகல சவுபாக்கியமும் சகல விசையங்களும் பெற்று, பூமியின் கண்ணிலே என்றூழி காலமும் கண்ணேறு வாராமல் ஆயிரம் பிறை தொழும் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி, மூங்கில்போல் சுற்றமும் முசியாமல் வாழ்ந்திருந்து, பின்பு நரகதி விட்டு ஸ்திரகதியாகிய பரகதியடைந்து, அரனருள் பெற்றிருப்பார்."

(54)

திருமுருகர் செயம்.

திருத்தணி ஆண்டவன் ரக்ஷிக்கக் கடவது.

பரிதாவி வருடம் மாசி மாதம்.

திருவளர் குன்றத்தூரில் சீர்கரு ணேசர் தம்மின்

மருவளர் அட்டகோண மகரிஷி கோத்தி ரத்தில்

திறமுள சோமநாதன் செய்நாம தானப் பன்றன்

கதைதனை உரைக்கவந்து கணபதி காப்பார் தாமே!

நூல் முற்றும்

**அச்சிட்டோர் :** ✆ : 854 56 70

**இராயப்பேட்டை எழுதுப்பொருட்கள் அச்சு மற்றும் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட், சென்னை 14.**

## அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னைப் பல்கலைக்கழகம் வளாகம்,
சென்னை – 5.

### வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| நீதிக் கதைகள் | - | 30.00 |
| மடல் திரட்டு | - | 43.00 |
| கருப்பர் குளுவ நாடகம் | - | 43.00 |
| நலங்கு மெட்டு இராமாயணம் | - | 306.00 |
| தமிழக ஊர் வரலாறுகள் | - | 40.00 |
| இடங்கைவலங்கையர் வரலாறு | - | 40.00 |
| தமிழ் அகராதி | - | 50.00 |
| வைத்திய அகராதி | - | 34.00 |
| பழனியாண்டவர் சிந்து பாமாலை | - | 40.00 |
| சுந்தரமூர்த்தி நாயனார் யட்சகானம் | - | 60.00 |
| யயாதி விலாசம் | - | 104.00 |
| நாவாய் சாத்திரம் | - | 51.00 |
| இராகதாளப் பிரத்தாரம் | - | 68.00 |
| பிரத்யும்ன சரிதம் | - | 94.00 |

25% தள்ளுபடி வழங்கப்படும்

*Printed by :*

**Royapettah Stationery and Printing and Allied Products Producers Industrial Co-op. Society Ltd.,**
**26, Koya Arunagiri First Street, Royapettah, Chennai - 14.**